மங்கள வைபவங்களுக்
கேற்ப உடுபுடவைகள்
ராசி சில்க்ஸ்
நியூ மார்க்கட்
உட்புறம்
யாழ்ப்பாணம்.

பக்கங்கள்: ஆறு

Registered as a Newspaper

★ காஞ்சிபுரம்
★ பெனாரிஸ்
★ கெவி தஞ்சூர்
★ பாட்வி
★ பட்டுவேஷ்டிகள்
மற்றும் சகலவிதமான
பிளஸ்ல் பீஸ் வகைகளுக்கும்
ராசி சில்க்ஸ்
நியூ மார்க்கட்
உட்புறம்
யாழ்ப்பாணம்.

# உதயன்

விலை ரூபா 3-50

சுடர் 5: பிரமோதூத ஆடு வைகாசி மீ 04 உ. வெள்ளிக்கிழமை ஹிஜ்ரி 1410 ஷவ்வால்பிறை 22 (18 · 05 1990) UTHAYAN - A LIVELY NATIONAL TAMIL DAILY கதிர்: 89

## அரசமைப்பின் 6 வது திருத்த நீக்கம்; ஈரோஸ் பிரேரணை!

### விரைவில் நாடாளுமன்றத்தில்

கொழும்பு, மே. 18

அரசமைப்பின் ஆறாவது திருத்தத்தையும் பதின்மூன்றாவது திருத்தத்தின் சில ஷரத்துகளையும் நீக்குவதற்கான பிரேரணை ஒன்றை ஈரோஸ் அமைப்பின் அரசியல் பிரிவான ஈழவர் ஜன நாயக முன்னணி விரைவில் நாடாளுமன்றத்துக்குக் கொண்டுவரும். கொழும்பு அரசியல் வட்டாரங்கள் இத்தகவலை உதயனுக்குத் தெரிவித்தன.

மேற்படி திருத்தத்தை விரைவில் நாடாளுமன்றத்துக்குக் கொண்டுவந்து நிறைவேற்றும்படி விடுதலைப் புலிகள் உட்பட பல தமிழ் அமைப்புகள் இலங்கை அரசை வற்புறுத்தி வருவது தெரிந்ததே.

மேற்படி திருத்தப் பிரேரணை நாடாளுமன்றத்தில் மூன்றில் இரண்டு பங்கு பெரும்பான்மையுடன் நிறைவேற்றப்பட்டால் மட்டுமே அது சட்ட அந்தஸ்துப் பெறும்.

மூன்றில் இரண்டு பங்கு பெரும்பான்மையுடன் இச் சட்ட மூலத்தை நிறைவேற்றுவதில் சிக்கல் இருப்பதைக் காட்டி அரசாங்கம் சட்ட

(5 ஆம் பக்கம் பார்க்க)

### வட்டமிட்ட விமானங்கள்

நேற்று தர்மபுரம், கிளிநொச்சிப் பகுதிகளுக்கு மேலாக ஸ்ரீலங்கா விமானப் படை விமானங்கள் வட்டமிட்டுச்சென்றதாக அங்கிருந்து கிடைத்த செய்திகள் தெரிவித்தன. [உ]

### முச்சந்தி முரளி



அப்ப பிரச்சினைப்பட்டுக் கொண்டிருக்கிற இரண்டு நாடுகளோடும். ஒரு மாதிரிச் சமாளிச்சுக்கொண்டு போற தந்திரோபாய,வழிபோலை.

### சுப நேரம்

18 – 5 – 90
வெள்ளிக்கிழமை வைகாசி 04
சுபநேரம் ;
5.53 - 7. 23
இராகுகாலம்
10·23 - 11.53
இவை இரவுக்கும் பகலுக்கும் பொருந்தும்

## இந்திய-பாக். எல்லையில் துப்பாக்கிச் சண்டை!

இந்திய பாகிஸ்தான் எல்லைப்புறத்தில் இருதரப்புப் படையினருக்குமிடையே துப்பாக்கிச் சண்டை இடம்பெற்றுள்ளது.

அந்தத் துப்பாக்கிச்சண்டையில் பதினொரு பாகிஸ்தான் வீரர்கள் உயிரிழந்தனர் என்று இந்தியத் தரப்பினர் கூறினர்.

அது தவறானதகவல் என்று கூறிய பாகிஸ்தான் அரசுவட்டாரங்கள் இருபடைகளுக்கும் இடையே துப்பாக்கிச்சண்டை இடம்பெற்றது என்பதை ஒப்புக்கொண்டன. (அ-எ)

## எல்லைப்புறக் கிராமங்களில் மீளக்குடியமர வலியுறுத்து

வவுனியா, மே 18

செட்டிகுளம் உதவி அரசாங்க அதிபர் பிரிவைச் சேர்ந்த, எல்லைப்புறக் கிராமங்களான பாவற்குளம், 9 ஆம் யுனிட், மதவு வைத்த குளம், சின்னத் தம்பனை, சின்னத் துலாவல் குளம் ஆகிய கிராமங்களைச் சேர்ந்த இடம் பெயர்ந்தவர்கள், தங்களது சொந்த இடங்களுக்குச் சென்று மீளக் குடியமர வேண்டும் எனக் கேட்கப்பட்டுள்ளனர்.

அவ்வாறு மீளக்குடியமரத் தவறுவோரின் காணிகளை, காணி இல்லாதவர்களுக்குப் பகிர்ந்தளிக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்று தமிழீழ விடுதலைப் புலிகள் அறிவித்துள்ளனர்.

தங்கள் காணிகளில் மீளக் குடியமராதவர்களுக்கு வழங்கப்பட்டு வரும் உணவு முத்திரை, ஜனசக்தி, வீட்டுத்திட்டம் போன்ற திட்டங்களின் மூலம் வழங்கப்படும் உதவிகளும் நிறுத்தப்படும் என்றும் விடுதலைப்புலிகளின் செட்டிகுளம் வட்டாரப் பொறுப்பாளர் திரு. ரமேஸ் அறிவித்துள்ளார். (அ-164)

## யாழ் மாநகர புனரமைப்பு; ரூ. 50 லட்சம் வழங்க உறுதி

யாழ்ப்பாணம், மே 18

யாழ்- மாநகரசபை மேற்கொண்டு வரும் புனர்நிர்மாணப் பணிகளுக்கு வடக்கு-கிழக்கு மாகாண புனர்நிர்மான அமைச்சு 50 லட்சம் ரூபாவை வழங்கவுள்ளது.

இதற்கான உறுதியை நேற்று யாழ் - செயலகத்தில் வைத்து வடக்கு - கிழக்கு மாகாண புனர்நிர்மாண அமைச்சின் செயலாளர் திரு. பத்மநாதன் யாழ். மாநகரசபை ஆணையாளரிடம்தெரிவித்தார்.

யாழ் மாநகரசபை தற்பொழுது நவீனசந்தை புனரமைப்பு,நீர்விநியோகம், வீதித் திருத்த வேலை உட்பட பல புனரமைப்பு வேலைகளை மேற்கொண்டு வருகிறது.

இந்தப்பணிகளைப் பூர்த்தி செய்வதற்கு மாநகர சபைக்கு ஆகக் குறைந்தது ஒரு கோடி ரூபா தேவைப்படுவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

## சுன்னாகத்தில் நேற்று மின்கம்ப மரண தண்டனை

மயிலணி, மே 18

வடக்கில் நீண்ட நாட்களின் பின்னர் நேற்று சுன்னாகத்தில் வைத்து ஒருவருக்கு தமிழ்ப் போராளிகளினால் மின் கம்ப மரண தண்டனை நிறைவேற்றப்பட்டது.

சுன்னாகத்தில் கே. கே. எஸ். வீதி பெற்றோல் நிலையத்துக்கு அருகில் வைத்து நேற்றுக் காலை 7 மணியளவில் தெல்லிப்பளையைச் சேர்ந்த சுந்தசாமி என்பவர் இத் தண்டனைக்கு உள்ளானார்.

தெல்லிப்பளை கிழக்கைச் சேர்ந்த கனகசுந்தரராஜ் என்பவரை கத்தியால் குத்தி கொலை செய்தமைக்காக இத்தீர்ப்பு நிறைவேற்றப்பட்டதாக மரண தண்டனை வழங்கப்பட்ட இடத்தில் காணப்பட்ட ஒரு அட்டையில் எழுதித் தொங்க விடப்பட்டிருந்தது. (உ-89)

## புலிகளுடன்பேசி "முறுகல்" நிலையை நீக்க ஹமீத் திங்களன்று வடக்கே வருகிறார்

### மாத்தயா, யோகி, அன்ரன் பாலசிங்கம் ஆகியோரைச் சந்தித்து உரையாடுவார்

கொழும்பு, மே 18

அரசாங்கம் — விடுதலைப் புலிகள் உறவில் ஏற்பட்டுள்ள "முறுகல்" நிலையை நீக்கும் நோக்குடன் விடுதலைப்புலிகளின் உயர் தலைவர்களுடன் பேசுவதற்காக வடக்கு, கிழக்கு மாகாண சமாதானக் குழுவின் தலைவரும் நீதி அமைச்சருமான ஜனாப். ஏ. ஸி. எஸ். ஹமீத் எதிர்வரும் திங்கட்கிழமையன்று யாழ்ப்பாணம் வருகிறார்.

அவர் விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணியின் தலைவர் திரு. கோபாலசாமி மகேந்திரராஜா (மாத்தயா), செயலாளர் நாயகம் திரு. யோகரட்ணம் யோகி, ஆலோசகர் டாக்டர் அன்ரன் பாலசிங்கம் ஆகியோரைச் சந்தித்து உரையாடுவார்.

திங்கள் நண்பகல் விசேட விமானத்தில் பலாலி வந்து சேரும் அமைச்சர் ஹமீத்தை விடுதலைப்புலிகள் அங்கிருந்து தமதுபாதுகாப்புடன் அழைத்துச் செல்வர்.

யாழ்ப்பாணத்தில் பெயர் குறிப்பிடப்படாத ஓர் இடத்தில் அமைச்சர் விடுதலைப் புலிகளின் பிரதிநிதிகளுடன் பேச்சுவார்த்தை நடத்துவார்.

அரசாங்கம் ஈ. பி. ஆர்.எல். எவ் பிரதிநிதிகளுடன் உத்தியோகபூர்வமான பேச்சுக்களை ஆரம்பித்திருப்பதை

(5 ஆம் பக்கம் பார்க்க)

## சந்திரசேகரன் கைதானதற்கு ஐ.ஜி.பி தெரிவிக்கும் காரணம்!

நுவரெலியாப்பகுதியில் சமீபத்தில் தீவிரவாதச் சந்தேகநபர்கள் சிலர் கைதுசெய்யப்பட்டனர். விசாரணையின்போது அவர்கள் சந்திரசேகரனே தமது தலைவர் என்று தெரிவித்திருந்தனர். அதனாலேயே அவர் கைது செய்யப்பட்டார்.

வாராந்த அமைச்சரவைக் கூட்டத்தின் பின்நடைபெற்ற செய்தியாளர் மாநாட்டில் பொலீஸ்மா அதிபர் ஐ. ஜி. பி. திரு ஏர்னெஸ்ட் பெரேரா மேற்கண்டவாறு தெரிவித்தார்.

மலையக தொழிற்சங்கத் தலைவர் சந்திரசேகரன் கைது செய்யப்பட்டது ஏன் என்று செய்தியாளர் ஒருவர் கேள்வி எழுப்பினார், அப்போதே பொலீஸ் மா அதிபர் மேற்கண்ட பதிலை அளித்தார்.

திரு சந்திரசேகரன் விசாரணையின் போது நிரபராதியாகக் காணப்பட்டால் விடுவிக்கப்படுவார் என்றும் பொலீஸ்மா அதிபர் தெரிவித்தார். (இ)

## தலவாக்கலைச் சம்பவம்

## வேலை நிறுத்தம் பரவுகிறது; மேலதிக பொலீஸார் குவிப்பு!

நுவரெலியா, மே 18

மலையக மக்கள் முன்னணித் தலைவர் திரு. சந்திரசேகரன் கைது செய்யப்பட்டதற்கு எதிர்ப்புத் தெரிவிக்கு முகமாக நேற்று இரண்டாவது நாளாக தலவாக்கலையிலும் அதன் சுற்றுப்புறங்களிலும் வேலை நிறுத்தங்கள் நடைபெற்றன

சுமார் 50 தோட்டங்களைச் சேர்ந்த 75 ஆயிரம் தோட்டத் தொழிலாளர்கள் வரை நேற்று வேலை நிறுத்தம் செய்தனர் என்று அங்கிருந்து வரும் செய்திகள் தெரிவித்தன

மலையக மக்கள் முன்னணியின் தலைமையகத்தில் இருந்து கதிரேசன் கோயிலுக்குப் பிரார்த்தனை செய்ய ஊர்வலமாகச் சென்றோர் மீது நடத்தப்பட்ட தாக்குதல் குறித்து மலையக மக்கள் முன்னணி ஜனாதிபதிக்கும், பாதுகாப்புத் துணை அமைச்சருக்கும் தந்திகளை அனுப்பி உள்ளது

இந்தத் தாக்குதலில் மூன்று பெண்கள் உட்பட ஆறுபேர் காயம் அடைந்தனர் என்பது தெரிந்ததே.

தலவாக்கலைப் பகுதியில் வேலை நிறுத்தம் மேலும் பரவும் சாத்தியம் உருவாகி வருவதை அடுத்து மேலதிக பொலீஸார் தொடர்ந்தும் குவிக்கப்பட்டு வருகின்றனர் (இ-2)

## கலா தம்பிமுத்துவின் இறுதிக் கிரியைகளில் உறவினர் பங்கு பற்ற விசேட விமானம்

கொழும்பு, மே 18

ஜனாதிபதி திரு. ஆர். பிரேமதாச நேற்று ஏ. எவ். றேமன்ஸ் அந்திமகாலசேவை நிலையத்துக்குச் சென்று திருமதி கலா தம்பிமுத்துவின் பூதவுடலுக்கு அஞ்சலி செலுத்தினார்.

கடந்த7ஆம் திகதி கொழும்பு கிறகறி வீதியில கனடாத் தூதரக வாசலில் இனந்தெரியாத சிலர் நடத்திய துப்பாக்கிப் பிரயோகத்தில் அவரது கணவர் சாம் தம்பிமுத்துஎம். பி உயிரிழந்தார் என்றும் படுகாயம் அடைந்த கலா தம்பிமுத்து கடந்த புதன்கிழமை காலை மரணமானார் என்பதும் தெரிந்தவையே.

பூதவுடல் நேற்று பிற்பகல் ஏ. எவ் றேமன்ஸ் அந்திமகால சேவை நிலையத்தில் இருந்து கனத்தை மயானத்துக்கு எடுத்துச் செல்லப்பட்டு இந்து சமய முறைப்படி தகனம் செய்யப்பட்டது

அமைச்சர் அத்துலத் முதலி, திரு அனுர பண்டார நாயக்கா உட்பட அரசாங்க - எதிர்க்கட்சி உறுப்பினர்கள் பெருமளவில் இறுதிச் சடங்குகளில் கலந்துகொண்டனர்.

திருமதி கலா தம்பிமுத்துவின் உறவினர்கள் மட்டக்களப்பில் இருந்து கொழும்பு வருவதற்காக ஜனாதிபதி திரு. ஆர். பிரேமதாச விசேட விமானப்படை விமானம் ஒன்றை ஏற்பாடு செய்திருந்தார்.

திருமதி கலா தம்பிமுத்து

(5 ஆம் பக்கம் பார்க்க)

## மாகாண தேர்தலில் பங்கு பற்ற புளொட் விதிக்கும் நிபந்தனைகள்

லண்டன் மே 18

புளொட் இயக்கத்தின் அரசியற் பிரிவான ஜனநாயக மக்கள் விடுதலை முன்னணி வடக்கு கிழக்கு மாகாண சபைத் தேர்தலில் தமது இயக்கம் கலந்து கொள்வதானால் சில நிபந்தனைகள் நிறைவேற்றப்பட வேண்டும் என அறிவித்திருக்கிறது

வடக்கு கிழக்கு மாகாணத்தில் பாதுகாப்பு, மற்றும் சட்டம் ஒழுங்கை நிலைநாட்டுவதற்கும் —

தமிழீழ விடுதலைப்புலிகள் உட்பட எல்லாத் தமிழ்க் குழுக்களினதும் உறுப்பினர்கள் மாகாண பொலீஸ் படையிலும் பாதுகாப்புப் படையிலும் சேர்க்கப்பட வேண்டும்.

பொலீஸ் படையினர் பாதுகாப்புப் படையினர் மற்றும் ஆயுதங்கள் கொண்டுசெல்ல சட்டரீதியாக அனுமதிக்கப்பட்டவர்களைத் தவிர வேறு

(5 ஆம் பக்கம் பார்க்க)

## யாழ் மாவட்ட பாடசாலைகளில் மதிய உணவு இன்றுடன் நிறுத்தம்

யாழ்ப்பாணம், மே 18

யாழ். மாவட்டப் பாடசாலைகளில் தற்பொழுது மேற்கொள்ளப்பட்டு வரும் மதிய உணவு விநியோகம் உடனடியாக நிறுத்தப்படவிருக்கிறது.

இதற்கான சுற்று நிருபங்கள் சகல பாடசாலை அதிபர்களுக்கும் அனுப்பி வைக்கப்படவுள்ளன.

சுற்று நிருபம் தயாரிக்கும் வேலைகள் நேற்று யாழ். கல்வித் திணைக்களத்தில் துரித கதியில் மேற்கொள்ளப்பட்டிருந்தன.

மாணவர்களுக்கு மதிய போசனத்துக்குப் பதிலாக உணவு முத்திரைகள் வழங்குவதற்கான ஏற்பாடுகளை கல்வி அமைச்சு மேற்கொண்டு வருகிறது.

இத்தகவலையாழ்மாவட்ட கல்விப் பணிப்பாளர் திரு. இ. சுந்தரலிங்கம் நேற்றுத் தெரிவித்தார்.

மதிய உணவுக்குப் பதிலாக ஒவ்வொரு மாணவருக்கும் 3 ரூபா பெறுமதியான உணவு முத்திரைகள் வழங்கப்படும்.

இந்த முத்திரைகள் மூலம் மாணவர்கள் பாடசாலையில் ஆரம்பிக்கப்படவுள்ள கூட்டுறவுக் கடைகளில் பாடசாலைப் உபகரணங்களையும் உணவுப் பொருள்களையும் பெற்றுக் கொள்ள முடியும் என்றும் அவர் தெரிவித்தார். (உ-10)

## மிளகாய்-இந்தியாவிலிருந்து வெங்காயம்-பாகிஸ்தானிலிருந்து

கொழும்பு, மே 18

மிளகாய், வெங்காயத்துக்கு நிலவும் பற்றாக்குறையைப் போக்குவதற்காக இந்தியாவிலிருந்தும் பாகிஸ்தானிலிருந்தும் அவை இறக்குமதி செய்யப்படும்.

அமைச்சர் ரஞ்சன் விஜேரத்தினா இத்தகவலைத்தெரிவித்தார்.

ஐந்நூறு மெட்ரிக் தொன் செத்தல் மிளகாய் இந்திய அரச வர்த்தக கூட்டுத்தாபனத்திடம் இருந்து கொள்வனவு செய்யப்படவுள்ளது.

இதற்கான கேள்விப் பத்திரம் ஏற்றுக்கொள்ளப்பட்டிருக்கிறது. ஒரு மெட்ரிக் தொன் செத்தல் மிளகாயின் விலையை 9 155 ரூபா என்று ஆகக்குறைந்த விலைக்கு வழங்க இந்திய கூட்டுத்தாபனம் சம்மதித்துள்ளது. 280 மெட்ரிக் தொன் பெரிய வெங்காயத்தைக் கொள்வனவு செய்யும் கேள்விப் பத்திரம் சரார்ச்சி நிறுவனம் ஒன்றுக்கு வழங்கப்பட்டுள்ளது — என்றும் அமைச்சர் விஜேரத்தினா தெரிவித்தார். (அ-எ)

இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சின்னஞ்சிறு விளம்பரம்

### விற்பனைக்கு

பூரண விளைதிறனுடைய பம்பாய் வெங்காய விதை (புதிய இறக்குமதி) விற்பனைக்குண்டு. பிள்ளையார், 259. காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம். (3451)

### உடன் விற்பனைக்கு

109 சிறி 6200 Yamaha-50 Racing. Mo (Reconditioned) Reg. உடன் விற்பனைக்குண்டு, இன்றும் நாளையும் பார்வையிடலாம். 27, சுதிற்றல் வீதி (Bishop House முன்பாக) யாழ்ப்பாணம். [3478]

### திருமண அழைப்பு கார்ட்டுகள்

புதிய அச்சடிக்கும் திருமணக்காட்டுகள் சகலடிசைன்களிலும் விற்பனையாகிறது உங்கள் எண்ணம் போல் தெரிவு செய்ய, ஸ்ரீகாந்த-புத்தகசாலை மின்சாரநிலைய வீதி. பஸ் நிலைய முன்புறம், யாழ்ப்பாணம். (C/5033)

### FOR SALE

Theodolites & Levels. Kern T 16 அளவைக் கருவி, Automatic Levels (Wild. Nikon) விற்பனைக்குண்டு தொடர்பு: T சபாரட்ணம் மடத்தடி, தெல்லிப்பளை. (3477)

### தேவை

பழைய பேப்பர் கொப்பி, புத்தகம், சோதனைப் பேப்பர், சிமென்ற் பாக் தேவை. தொடர்பு கொள்ளவும் அண்ணா தொழிலகம், இணுவில். (சி-5041)

பிரபல மருந்துக் கடை ஒன்றில் விற்பனையாளராக கடமையாற்ற A/L வரை படித்த ஆங்கில அறிவுடைய 20-25 வயதிற்கு இடைப்பட்ட பெண்கள் தேவை. நற்சான்றிதழ்களுடன் விண்ணப்பிக்கவும் தொடர்பு இல. 699, C/o உதயன். (சி-5042)

### தேவை

கற்பூரம் அடிப்பதில் அனுபவம். உள்ளவர்களும், பழக விரும்புகிறவர்களும், நேரில் வரவும் குகாதேவி இன்டஸ்றீஸ், ப. நோ. கூ. ச கிளை முன்பாக, அல்லாரை தெற்கு, மீசாலை. (3473)

### மணமகள் தேவை

கனடாவில் நிரந்தரமாக வசிப்பவரும், விவாகரத்துச் செய்தவரும் வேளாள கத்தோலிக்க ம் இரு பிள்ளைகளின் தந்தையும் 42 வயதுடைய ஒருவருக்கு கல்யாணமாகாத அல்லதுவிதவையான ஏறக்குறைய 35 வயதுடைய கத்தோலிக்க அல்லது இந்து வேளாள குல மணமகள் தேவை. கனடா செல்ல வேண்டும். விபரங்களுடன் 22- 05-90க்கு முன்பாக விண்ணப்பிக்கவும். C/o உதயன் 123. [13082]

### வீடு வாடகைக்கு

யாழ் பல்கலைக்கழக சுற்றாடலில் சகல வசதிகளும் கொண்ட வீடு உடன வடகைக்கு உண்டு தொடர்பு;- A P குலசிங்கம், 75, கஸ்தூரியார் வீதி, பெரியகடை, யாழ்ப்பாணம். நேரம்.-பி.ப 2 00 மணி முதல் மாலை 4 00 மணிவரை. (3474)

### A/L தாவரவியல்

அல்காக்களும் பங்கசுக்களும் ஓர் அறிமுகம் எழுதியவர் கலாநிதி அ. சிவவாலன் விலை ரூபா 35/- கிடைக்குமிடம் பூபாலசிங்கம் புத்தகசாலை யாழ்ப்பாணம். (சி/4494)

### புலமைப் பரிசில் பரீட்சை

ஆண்டு 5 புலமைப் பரிசில் மாதிரிப் பரீட்சை 22-05-90 செவ்வாய் மு. ப 8 00, 10.30 பி.ப 1.30 ஆகிய நேரங்களில் நடைபெறும். ஆண்டு 4 தொடக்கம், ஆண்டு 11 வரை சகல பாடங்களும் கற்பிக்கப்படுகின்றன. புலமைப் பரிசில் வினாவிடை விற்பனைக்கு உண்டு. புதிய கல்வி நிலையம், கெங்காதரன் ஆஸ்பத்திரி முன்பாக, யாழ்ப்பாணம். (3466)

### விற்பனைக்கு

C-F-70 சாலி மற்றும் வீட்டுப் பாவனைப் பொருட்களும் விற்பனைக்கு உண்டு. தொடர்பு; பிறைற் ஒக்ஸன் சென்ரர், மெயின் வீதி யாழ்ப்பாணம். (13207)

## பூநகரிக்கு நிதியுதவி

நெடுந்தீவு மே 18

பூநகரி கிராமத்துக்கு புனர்நிருமாணத் திட்டங்களுக்கென "உலக தரிசனம்" 9 லட்சத்து 42 ஆயிரத்து 500 ரூபாவை வழங்கும்.

சிறுகைத்தொழில் சுழற்சி முறைக்கடன், கடற்றொழில் அபிவிருத்தி விவசாய உபகரணங்கள் என்பவற்றுக்கும் வேறு புனரமைப்புகளுக்கும் இந்நிதி பயன்படும்.

## அதிபரானார்

யாழ்ப்பாணம், மே 18

"செய்யும் தொழிலையே தெய்வமாகக்கருதி ஆசிரியப் பணியின் மகத்துவத்தை மனதார உணர்ந்து கடமை புரிந்தமையால் இன்று இவர் அதிபராகப் பதவி உயர்வு பெற்றார்."

கொக்குவில் ஸ்ரீ ஞான பண்டித வித்தியாசாலையில் உப அதிபராகப் பணியாற்றி கொக்குவில் நாமகள் வித்தியாலய அதிபராக பதவியேற்கும் திரு. க. திருநாவுக்கரசுவைப் பாராட்டி நடத்தப்பட்ட வைபவத்தில் உரையாற்றிய அதிபர் திரு கா. கணேசதாசன் இவ்வாறு கூறினார்.

இவ்விழாவில் பேசிய மாணவர்களும் ஆசிரியர்களும் திரு. நாவுக்கரசுவின் சேவையைப் பாராட்டி அன்பளிப்புக்களையும் வழங்கினர். (ப)

## சோமாஸ்கந்தா முதலிடம்

சாவகச்சேரி மே 18

சாவகச்சேரி உதவி அரசாங்க அதிபர் பிரிவிலுள்ள விளையாட்டுக் கழகங்களுக்கிடையே நடைபெற்ற 16 ஆவது தேசிய விளையாட்டு விழாவின் போது மட்டுவில் தெற்கு சோமஸ்கந்தா விளையாட்டுச்கழகம் முதலாம் இடத்தைப்பெற்று வெற்றிக் கேடயத்தை தனதாக்கிக் கொண்டது.

2 ஆம் இடத்தை மட்டுவில் வடக்கு மோகனதாஸ் விளையாட்டுக்கழகமும், 3 ஆம் இடத்தை கைதடி வளர்மதி விளையாட்டுக் கழகமும் பெற்றன.

மட்டுவில் மக வித்தியாலய மைதானத்தில் சாவகச்சேரி உதவிஅரசாங்க அதிபர் திரு. பூ. சுந்தரம்பிள்ளை தலைமையில் நடைபெற்ற இந் நிகழ்ச்சியில் வெற்றி பெற்றோருக்கு திருமதி. சசிதேவி சுந்தரம்பிள்ளை பரிசில்களை வழங்கினார். விளையாட்டு அதிகாரி செல்வி. ந யசோதா நன்றி உரை நிகழ்த்தினர். (இ-31)

## தேவை

கிளிநொச்சியில் ஆரம்பிக்க உத்தேசிக்கப்பட்டுள்ள உதயன் காரியாலயத்துக்கு பொறுப்பதிகாரி ஒருவர் தேவை.

பத்திரிகை விநியோகம், பணம் வசூலித்தல் ஆகியவற்றைப் பொறுப்புணர்ச்சியுடன் செய்யக்கூடியவராக இருத்தல் வேண்டும்.

கிளிநொச்சியை நிரந்தர வசிப்பிடமாகக் கொண்டவராக அல்லது; கிளிநொச்சியில் தங்கி இருந்து பணி ஆற்றக் கூடியவராகவும் அவர் இருக்க வேண்டும்.

தெரிவு செய்யப்படுபவர் பிணைப்பணம் செலுத்துமாறு கோரப்படுவார்.

தகமைகள் மற்றும் நற்சான்றிதழ்களுடன் 23-05-90 முன்பாக கீழ்வரும் விலாசத்திற்கு விண்ணப்பத்தை அனுப்பி வைக்க வேண்டும்.

ஆளணி முகாமையாளர்,
நியூ உதயன் பப்பிளிக்கேஷன்
பிறைவேற் லிமிடெட்,
292/2, நாவலர் வீதி,
யாழ்ப்பாணம்.

## கண்ணீர் அஞ்சலி



### வேலுப்பிள்ளை தங்கேஸ்வரன்

தோற்றம்: 17-10 1950 — மறைவு: 15-05-1990

எங்கு சென்றனையோ தங்கா!
எம்மிடையே இருந்த உறவெல்லாம்
துறந்தனையோ!
நீ துறந்தாலும் எம்மிடையே நின்ற நினைவுகள்
மாறா!

துயருறும் கண்ணீரை காணிக்கை செலுத்தி நின் ஆத்மா சாந்திக்காக இறைவனை வேண்டுகின்றோம். சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

உடுப்பிட்டி
வர்த்தகர்கள்.

(சி/4522)

## ★ Computer Courses ★

புதிய பிரிவுகள்: BASIC
19-05-1990 (Sat & Sun) 9.00 a.m.
D - BASE III+
19-05-1990 (Sat & Sun 3 p.m.


**I.D.P. COMPUTER CENTRE**

342, K. K. S. Road,
Jaffna.

Branch: 7th Mile Post, Mallakam.

[சி-5036]

## முதலாம்ஆண்டு நினைவஞ்சலி



அமரர்

### முருகேசு குற்றாலலிங்கம்

(உபதபாலதிபர், வண்ணார்பண்ணை, யாழ்ப்பாணம்.

ஆண்டவன் படைப்பு: 27. 10. 1952. — அநியாயஅழிப்பு: 28. 05. 1989.

திதி: 18 - 05 - 1990

எங்கள் குடும்ப ஒளிவிளக்கை அழித்து
எம் குலத்தின் பாசக் குரலை மறைத்து
ஓராண்டு காலம் சென்றாலும்
ஓலமிடும் எம் நெஞ்சங்கள் உம்மை என்றும்
மறக்குமா?
எம் உள்ளக்கோவிலில்
என்றும் அழியா ஓவியமாய் வீற்றிருக்கும்
அன்புத் தெய்வமே!
உங்கள் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

அன்னாரது பிரிவால் துயருறும்
மனைவி, மக்கள், தாய் சகோதர,
சகோதரிகள், மாமா, மாமி, மைத்துன
மைத்துனிகள், மருமக்கள், உற்றார்,
உறவினர், நண்பர்கள்.

'றாஜபவனம்'
206, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

(13202)

## 4ஆவது வருட நினைவஞ்சலி



### செல்வி ரஜினி பாலசிங்கம்

(சுண்டிக்குளி மகளிர் கல்லூரி மாணவி)

மலர்வு: 27 - 05 - 1969 — உதிர்வு: 31 - 05 - 1986

திதி: 18 — 05 — 1990

ஆண்டுகள் நான்கு சென்றதுவே
உன் நினைவென்றும் அகன்றதில்லையே
நிழ்வுகளின் நினைவுகளில் நிதமும் உன் நினைவு
நித்தமெமை உருக்கும் நீங்காதுன் சிந்தனைகள்!
நீ பிரிந்து வருடங்கள் நான்காகலாம் ஆனால் எம்
இதயங்களில் என்றும் நீ வாழ்கிறாயம்மா!
வேதனைகள்; சோதனைகளைத் தாங்கி நிதமிங்கு
வெந்து கொண்டிருக்குதம்மா எங்களிதயங்கள்!
நீஎம்முடன் வாழ்ந்த அந்தப் பசுமையான நாட்களோ
நீங்காமல் பரிதவிக்கும் எங்களுக்கு இதமளிக்கும்!

பிரிவால் துயருறும்
தந்தை, தாய், தம்பி
உற்றார், உறவினர்கள்,
இ பாலசிங்கம், (தவைஸ்)
(ரஜினி ஒதீம் ஹவுஸ்)

35, குருசோ வீதி,
சுண்டிக்குளி.
யாழ்ப்பாணம்.

[சி-5044]

மண்ணிற்காய் மலர்ந்த மலர் மண்ணிற்காய் உதிர்ந்து
மலர்ந்திட்ட ஈராண்டில் அறிவொளியின்

## "இதய அஞ்சலி"



### கப்டன் கிங்ஸ்லி [நிலா வெளிப் பொறுப்பாளர்]

(வல்லிபுரம் சிவகுமார், கரவெட்டி)

மலர்வு: 22 - 12 - 1963 — உதிர்வு: 18 - 05 - 1988

வெங்களத்தில் செங்குருதி தந்தேதான் தமிழீழம்
எங்களுக்கு மலருமென்ற இலட்சியத்தை ஏற்றிட்டு
அங்குனது குருதிதனை ஆறாக்கி விட்டாயே
எங்களது இதய நிறை அஞ்சலிகள் ஏற்றிடுக

[illegible] நிலையம்,
[illegible]

[3586]

## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்



### விநாயகமூர்த்தி செல்லச்சாமி

தோற்றம்: 10 - 01 - 1920 — மறைவு: 19 - 04 - 1990

அன்னாரின் 31 ஆம் நாள் அந்தியேட்டி கிரியைகள் 19 - 5 - 90 அன்று 'சனிக்கிழமை காலை வல்வெட்டித்துறை ஊறணி தீர்த்த கடற்கரை மடத்தில் நடைபெறும். பின்பு 10 மணியளவில் நடைபெறும் வீட்டுக் கிரியைகளிலும் கலந்து கொள்ளுமாறு உறவினர்களையும், நண்பர்களையும் அன்புடன் வேண்டுகிறோம். 20 - 4 - 90 இல் நடைபெற்ற ஈமைச்சடங்கின் போது கலந்து கொண்டவர்களுக்கும் அனுதாபம் தெரிவித்தவர்களுக்கும் எமது மனமார்ந்த நன்றியை தெரிவித்துகொள்ளுகின்றோம்.

குடும்பத்தினர்.

கொத்தியால்,
வல்வெட்டித்துறை.

(3563)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பொய்யாமொழி

**குறள்:**

காமக் கடும்புனல் உய்க்குமே நாணொடு
நல்லாண்மை என்னும் புணை.

**பொருள்:**

நாணமும் நல்ல ஆண்மையுமாகிய தோணிகளைக் காமம் என்னும் கடுமையான வெள்ளம் அடித்துக் கொண்டு போய் விடுகிறது.


# உதயன்

இல: 292/2, நாவலர் வீதி, யாழ்ப்பாணம். தொலைபேசி: 2288

18 - 05 - 1990 த. பெ இலக்கம் 25


## தலவாக்கலைச் சம்பவம்

"1947 தொடக்கம் விட்ட தவறுகளுக்குப் பிராயச்சித்தமாக, சகலருக்கும் நிபந்தனை இல்லாத பிரசா உரிமை என்ற கொள்கை வகுக்கப்பட வேண்டும். இல்லையேல் மலையகமும் மற்றொரு வடக்கு - கிழக்காக மாறும். அங்கு பூகம்பம் வெடித்தபின் கவலைப்படாமல், பாடம் படித்தபின் திருந்த நினைக்காமல், இப்பொழுதே புதிய அணுகுமுறையுடன், இந்த மனிதப் பிரச்சினையைத் தீர்த்து விடுவதே தீர்க்க தரிசனம்" புத்திசாலித்தனமும் ஆகும்;

இவ்வாறு இம்மாதம் ஆறாம் திகதி, "மலையகத் தமிழர் பிரசாவுரிமை" என்ற தலைப்பில் இப்பத்தியில் எழுதிய ஆசிரியத் தலையங்கத்தில் வலியுறுத்தி இருந்தோம்; எச்சரித்து இருந்தோம் பத்து நாட்களில் பூகம்பத்தின் ஆரம்ப அறிகுறிகள் மலையகத்தில் தென்பட்டு உள்ளன!

ஆம். மலையகத்தில், — மலையகத் தமிழர்கள் வாழும் பிரதான பிரதேசங்களில் ஒன்றான தலவாக்கலையில்— பெரும் பதற்ற நிலை தோன்றியிருக்கிறது. பாடசாலை மாணவர்கள் வகுப்புகளைப் பகிஷ்கரித்திருக்கிறார்கள். மலையகத் தொழிலாளர்கள் வேலை நிறுத்தம் செய்திருக்கிறார்கள். இந்த வேலை நிறுத்தம் மற்றப் பகுதிகளுக்கும் பரவும் ஆபத்தும் தோன்றியுள்ளது.

ஆர்ப்பாட்ட ஊர்வலம் செல்ல முயன்ற மலையக மக்கள் மீது பொலிஸார் தடியடிப் பிரயோகம் செய்திருக்கிறார்கள். அதில் மூன்று பெண்கள் உட்பட ஆறுபேர் காயமடைந்தனர்.

இத்தனைக்கும் கருவாக இருந்தது மலையக மக்கள் முன்னணி என்ற தொழிற்சங்கத்தின் — சனநாயகக் கட்டமைப்புக்குள் அடங்கும் தொழிலாளர் சங்கத்தின் - தலைவர் கைது செய்யப்பட்டதே ஆகும்.

சம்பந்தப்பட்ட தொழிற்சங்கத் தலைவர், ஒப்பந்தத்தின் கீழ் இந்தியப் பிரசா உரிமைக்கு பதிவான மலையகத் தமிழர்களை இந்தியாவுக்கு அனுப்பி வைப்பதென்ற அரசாங்கத்தின் அறிவித்தலுக்கு—கொள்கைக்கு — எதிராகப் பணியாற்றியவர் என்பது கவனத்தில் கொள்ளப்பட வேண்டிய ஒன்றாகும். அது விவகாரத்தைப் பாரதூரமாக்கிக் கனம் கொள்ளச் செய்கிறது.

அரசாங்கத்தின் கொள்கையையோ, திட்டத்தையோ ஆட்சேபிக்கவும், எதிர்க்கவும் ஜனநாயகக் கட்டமைப்புக்குள் எவருக்கும் உரிமை உண்டு; உரிமை இருக்க வேண்டும் அதற்காக ஒருவரைக் கைது செய்வதென்றால் சனநாயகத்துக்குப் பதில் சர்வாதிகாரம் நடக்கிறது என்பதே அர்த்தம்.

கருத்துச் சுதந்திரம், பேச்சுச் சுதந்திரம் இருப்பதாகக் கூறப்படும் ஒரு நாட்டில், அரசின் நடவடிக்கைக்கு எதிராக அமைதி வழியில் எதிர்ப்புக் காட்டுவதற்கு உரிமை இல்லையா? அப்படியானால் ஆயுதம் தாங்கித்தான் எதிர்ப்புக் காட்ட வேண்டும் என்று அரசு விரும்புகிறதா அல்லது அப்படி மக்களை எண்ணத் தூண்டுகிறதா?

தொழிற்சங்கத் தலைவர் கைது செய்யப்பட்டதை ஆட்சேபித்து அமைதியான முறையில் ஆர்ப்பாட்டம் செய்யும் உரிமையும் மக்களுக்கு இல்லையா? அவசரகாலச் சட்டத்தின் கீழ் அந்த உரிமை அமுக்கப்பட்டு விட்டதா?

ஆர்ப்பாட்டம் செய்தவர்கள் மீது தடியடிப் பிரயோகம் செய்தது ஒரு புறமிருக்க, அதில் காயம் அடைந்தவர்களுக்கு சிகிச்சை பெறும் உரிமையும் அரசாங்க ஆஸ்பத்திரியில் மறுக்கப்பட்டிருக்கிறது.

அரசாங்கம் செய்வதை எதிர்ப்பவர்களுக்கு இது தான்கதி என்று காட்டும் அடக்குமுறைப் புத்தி; இது ஹிட்லர் ஆட்சியை ஒத்தது. மலையகத் தமிழர்களை எப்படியும் சீண்டலாம், தீண்டலாம் என்று அரசும், படையும் நினைக்கக் கூடாது.

அன்று நாம் வலியுறுத்தியது போல மலையகத் தமிழர் பிரச்சனை ஒரு மனிதப்பிரச்சினை. அது மனிதாபிமானத்துடன் தீர்க்கப்பட வேண்டியது. ஒப்பந்தம் காலாவதியாகி விட்டது. குறிப்பிட்ட காலத்திற்குள் அதனை அமுல் செய்யாமல் விட்டது அரசுகளின் தவறு.

மலையகத் தமிழர்கள் வெறும் சரக்கல்லர்- ஏற்றி இறக்குவதற்கு. அவர்களுக்கும் இந்த நாட்டின் வளர்ச்சியில் பெரும் பங்குண்டு. நாட்டின் வாழ்விலும், தாழ்விலும் கலந்து கொண்டவர்கள். காலம் காலமாக இங்கு வாழ்ந்து வருபவர்கள். அவர்கள் இந்த நாட்டுப் பிரசைகளாக வாழ்வதற்கு நூறு வீதமும் உரிமை உடையவர்கள். அவர்களைப் பலாத்காரமாக இந்தியா அனுப்ப அரசு நினைத்தால், அது மனித உரிமைகளை மீறுவதாகும்.

இவர்கள் விடயத்தில் இந்தியாவுடன் பேச்சுவார்த்தை நடத்துவதற்கு எந்தத் தேவையுமில்லை என்பதே எமது நிலைப்பாடு. இந்த நாட்டில் பிறந்து, வளர்ந்து நாட்டு நலனுக்காக உழைப்பவர்களை, இந்த நாட்டுப் பிரசைகளாக ஏற்றுக் கொள்ள வேண்டியது நாட்டின் கடமை.

அதை உணராமல் அடக்கு முறைகளையும், அராஜகத்தையும், அடாவடித்தனத்தையும் கையாண்டு மலையகத்தை யுத்தபூமியாக மாற்றாதீர்கள் என அரசைக் கேட்டுக் கொள்கிறோம்.

தலாவாக்கலை நிலைமையை அமைதி வழியில் சமரசமாகத் தணித்து, பெரும் பூகம்பம் அங்கு வெடித்து, நாட்டுப் பொருளாதாரத்தை எரித்து விடாமல் பார்த்துக் கொள்ள வேண்டிய பொறுப்பு முழுக்க முழுக்க அரசாங்கத்தையே சார்ந்தது.

# பாஸ்போர்ட் பிரிவு அதிகாரிகள் 15 பேர் திடீர் இடமாற்றம்

கொழும்பு மே 18

கொழும்பு சர்வதேச விமான நிலையத்திலும் பாஸ்போர்ட் அலுவலகத்திலும் பல வருடங்களாக வேலை செய்து வந்த பதினைந்து குடியகல்வு, குடிவரவு திணைக்கள அதிகாரிகள் திடீர் இடமாற்றம் செய்யப்பட்டனர்.

இவர்களில் சிலர் மீது சுமத்தப்பட்டுள்ள குற்றச் சாட்டுக்கள் குறித்து குடியகல்வு குடிவரவு திணைக்களம் விசாரணை ஒன்றை ஆரம்பித்துள்ளது. (உ-எ)

## சமய சந்நிதிகளில்

### ஞான வைரவர் பொங்கல் விழா

காங்கேசன்துறை மே 18

மாவிட்டபுரம் கீரிமலை வீதி சுடலை ஞானவைரவர் ஆலய வருடாந்தப்பொங்கல் விழா இன்று வெள்ளிக்கிழமை காலை நடைபெற உள்ளது.

அத்துடன் ஆலயத்தை புனரமைப்பது சம்பந்தமான கூட்டமும் அன்று மாலை ஐந்து மணிக்கு நடைபெறும். (இ-68)

### இலட்சார்ச்சனை

காங்கேசன்துறை, மே 18

மாதகல் நுனைசமுருகமூர்த்தி தேவஸ்தான வருடாந்தஇலட்சார்சனை நாளை வரும் 19 ஆம் திகதி ஆரம்பித்து தொடர்ந்து ஆறுநாட்கள் நடைபெற்று இறுதி நாள் சங்காபிஷேகம் நடைபெறும்.

இதற்கான ஏற்பாடுகளை ஆலய முகாமையாளர் திரு. க.பாலசுப்பிரமணியம் செய்து வருகிறார். (இ-68)

### பரராசசேகர பிள்ளையார் கோவிலில்

யாழ்ப்பாணம், மே 18

இணுவில் ஸ்ரீபரராசசேகரப் பிள்ளையார் மகோற்சவம் இன்று வெள்ளிக்கிழமை நண்பகல் 12 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி 29 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை பூங்காவனத் திருவிழாவுடன் நிறைவுபெறும்.

19 ஆம் திகதி சனிக்கிழமை கைலாச வாகனத் திருவிழாவும், 23 ஆம் திகதி புதன்கிழமை திருமஞ்சத் திருவிழாவும், 26 ஆம் திகதி சனிக்கிழமை சப்பறத் திருவிழாவும் நடைபெறும்.

திருவிழாக்காலத்தில் ஒவ்வொரு நாளும் மாலை 6 மணிக்கு சமயச் சொற்பொழிவுகள் இடம்பெறும்- (இ-7)

உரிமை கோரப்படாத

# காசோலைகள் - "டிராப்ட்டுகள்" கொழும்பு திருப்பி அனுப்பப்படும்

யாழ்ப்பாணம் மே 18

யாழ். மத்திய தபால் அலுவலகத்தில் தேங்கிக் கிடக்கும் வெளிநாட்டு காசோலைகளும் டிராப்ட்டுகளும் கொழும்பு மத்திய தபாலகத்துக்கு திருப்பி அனுப்பப் படவுள்ளன.

1987 அக்டோபர் அசம்பாவிதத்தின் போது வெளிநாட்டுக் காசோலைகளும், டிராப்ட்டுகளும் காணாமல் போயிருந்தன.

எனினும் பின்னர் சேதமடைந்த நிலையில் இவை மீட்கப்பட்டு சில காசோலைகள் உரியவர்களுக்கு தபால் அலுவலகத்தினால் ஒப்படைக்கப்பட்டன.

எனினும் அதிகம் சேதம் அடைந்த 45க்கு மேற்பட்ட டிராப்ட்டுகளும், காசோலைகளுமே எவரும் தகுந்த ஆதாரத்துடன் உரிமை கோராததை அடுத்து தற்போது கொழும்புக்கு அனுப்பி வைக்கப்பட உள்ளன. (இ-10)

## பெற்றோரை இழந்த மாணவர் விவரம் சேகரிக்கப்படுகிறது

கைதடி மே 18

சகல பாடசாலைகளிலும் தாய், தந்தையரற்ற 18 வயதுக்குட்பட்ட மாணவர்களுடைய விபரங்கள் யாழ் கல்வித் திணைக்களத்தினால் கோரப்பட்டுள்ளன.

இது தொடர்பாக விபரங்கள் கோரும் மாதிரிப் படிவம் யாழ். கல்விப் பணிப்பாளரினால் சகல பாடசாலைகளுக்கும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. (இ-74)

### பருத்தி நூல் தீர்வை குறைவு

கொழும்பு மே 18

பருத்தி நூல் மீதான சுங்கத் தீர்வை 25 சத வீதத்தில் இருந்து பத்துச் சத வீதமாகக் குறைக்கப்பட்டது.

கைத்தறித் தொழிலை வளர்க்குமுகமாக அரசு இந்த நடவடிக்கையை எடுத்துள்ளதாக அறிவிக்கப்பட்டது.

### கிரிக்கெட் மத்தியஸ்தர் பரீட்சை

குருநகர், மே 18

யாழ்- கிரிக்கட் மத்தியஸ்தர் சங்கத்தால் பின்போடப்பட்டிருந்த புதிய மத்தியஸ்தர்கள் தெரிவுக்கான பரீட்சை இம்மாதம் 22 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை நடைபெற இருக்கிறது.

மேற்படி பரீட்சைகள் யாழ். இந்துக்கல்லூரியில் அன்றைய தினம் காலை 9'00 மணிக்கு ஆரம்பமாகுமென அறிவிக்கப்படுகிறது. (இ-51)

## லயன்ஸ் கழக பாதசாரி கடவை

நாளை சனிக்கிழமை சுன்னாகம் லயன்ஸ் கழகத்தினர் மருதனார் மடம் இராமநாதன் கல்லூரியின் அருகில் பாதசாரிகள் கடவை ஒன்றை ஆரம்பித்து வைக்க ஏற்பாடு செய்துள்ளனர்.

காலை 10.30 மணிக்கு ஆரம்பமாகும் விழாவுக்கு யாழ்ப்பாணம் கல்விப் பணிப்பாளர் திரு ஆர். சுந்தரலிங்கம் பிரதம அதிதியாகக் கலந்து கொண்டு பாதசாரிகள் கடவையை அங்குரார்ப்பணம் செய்து வைப்பார்.

அத்துடன் கல்லூரிக்கு அருகாமையில் மரம் நடும் விழாவும் நடைபெறும். மில்க்வைற் அதிபர் திரு. க. கனகராசா மரம் நடும் விழாவை ஆரம்பித்து வைப்பார்.

விழா ஏற்பாடுகளை லயன்ஸ் கழக முதல் பிரதித் தலைவர் லயன் ஆர். கே. குலசேகரம் கவனித்து வருகிறார். (இ)

**நினைவில் இன்று**

**18-5-1990**

★ தத்துவமேதை பேட்ரண்ட்ரஸல் பிரபு பிறந்த தினம்

பிறப்பு:- 18 -05 -1872

இறப்பு:- 03- 02- 1970

## உலகத் தமிழர் விழா

யாழ்ப்பாணம் மே 18

குரும்பசிட்டி உலகத் தமிழர் ஆராய்ச்சி நிலையம் இம்மாதம் 20 ஆம் திகதி யாழ்ப்பாணம் வைத்தீஸ்வரா கல்லூரியில் உலகத் தமிழர் விழாவைக் கொண்டாடுகிறது.

யாழ்ப்பாணத்திலிருந்து வெளியாகும் ஐந்து தமிழ் பத்திரிகைகளின் ஆசிரியர்கள் இவ்விழாவை மங்கள விளக்கேற்றி ஆரம்பித்து வைப்பார்கள்.

மொறிசியஸ் தமிழர் தினமாகக் கொண்டாடும் இந்த விழாவில் மொறிசியஸ் தமிழ் ஏடுகள், தமிழ் மொழியில் வெளியிடப்பட்ட தபால்தலைகள், காசுத்தாள்கள், மொறிசியஸ் தமிழர் பண்பாட்டு வாழ்வைப் பிரதிபலிக்கும் புகைப்படங்கள், ஆவணங்கள் என்பன காட்சிக்கு வைக்கப்படுவதுடன் மொறிசியஸ் தீவில் நடைபெற்ற 7 ஆவது உலகத்தமிழாராய்ச்சிமாநாடு பற்றிய வீடியோ காட்சியும் காண்பிக்கப்படும்.

இது தொடர்பாக முழு ஏற்பாடுகளையும் குரும்பசிட்டி உலகத் தமிழர் ஆராய்ச்சி நிலையத்தைச் சேர்ந்த திரு. இரா. கனகரத்தினம் மேற்கொண்டுள்ளார். (இ-74)

### நாவற்குழி

## மகாவித்தியாலயத்துக்கு ஒலிபெருக்கிச் சாதனம் உதவி

கைதடி மே 18

நாவற்குழி மகா வித்தியாலயத்திற்கு 15 ஆயிரம் ரூபா பெறுமதியான ஒலி பெருக்கி உபகரணங்களும் ஜீ சி. ஈ. உயர்தர வகுப்பில் கல்வி கற்கும் செல்வி. பாலசிங்கம் பத்மவதனிக்குபுலமைப் பரிசிலும் வழங்கப்பட்டன.

யாழ்ப்பாணம் பெனின்சுலா குறூப் ஸ்தாபனம் இதனை வழங்கியது.

மேற்படி மகாவித்தியாலயத்தில் நடைபெற்ற தமிழ்த் தினப்போட்டியின் போது சிறப்புவிருந்தினராகக் கலந்து கொண்ட பிரஸ்தாப ஸ்தாபன பொது முகாமையாளர் திரு. சீ. சிறீஸ்கந்த குமார் ஒலிபெருக்கி உபகரணங்களை யாழ். உதவிக் கல்விப் பணிப்பாளர் திரு. சீ. தியாகராஜா விடமும் புலமைப் பரிசிலுக்கானகாசோலையை செல்வி. பா. பத்மவதனியிடமும்கையளித்தார்.

நாவற்குழி மகாவித்தியாலயத்திற்கு இந்த ஸ்தாபனத்தார் ஏற்கனவே இரும்பினால் செய்யப்பட்ட மேசைகளையும் கதிரைகளையும் வழங்கியுள்ளது குறிப்பிடத்தக்கது. (க-74)

# தமிழீழ விடிவு நெருங்குகிறது

## செல்லப்பா இசை நிகழ்ச்சியில் வன்னிப் பிராந்தியப் பொறுப்பாளர்

கிளிநொச்சி, மே 18

இனியும் அடுப்பங்கரையில் இருந்து பெண்கள் அடுப்பு ஊதமுடியாது. ஏனெனில் தமிழீழத்தின் விடிவு நெருங்கிக்கொண்டிருக்கிறது. பெண்கள் ஆயுதம் ஏந்துவது உடனடியாக நிகழ வேண்டும். இதுவரை எமது போராட்டக் களத்தில் 28 பெண் புலிகள் வீரமரணம் அடைந்துள்ளனர்.

வன்னிப் பிராந்திய விடுதலைப் புலிகளின் அரசியல் பொறுப்பாளர் திரு சந்திரன் மேற்கண்டவாறு கூறினார்.

தேனிசை செல்லப்பாவின் எழுச்சி பாடல்கள் நிகழ்ச்சி கடந்த செவ்வாய்க்கிழமை கிளிநொச்சி மகாவித்தியாலய மைதானத்தில் நடைபெற்றது.

வன்னிப் பிராந்திய விடுதலைப் புலிகளின் அரசியல் பொறுப்பாளர் திரு சந்திரன் நிகழ்ச்சிக்குத் தலைமை வகித்தார்.

அவர் மேலும் பேசுகையில் பெண்கள் தமது உரிமைகளை பாதுகாத்து கொள்வதற்காக போராட்டத்தில் உடனடியாக குதிக்க வேண்டும் என்றார்.

கிளிநொச்சி மாவட்ட அரசியல் பொறுப்பாளர் திரு. கோபி வரவேற்புரை நிகழ்த்துகையில் கடந்த 15 வருடகாலமாக தமிழக மக்களுக்கும், உலகில் வாழும் தமிழ் மக்களுக்கும் எமது போராட்டத்தை உணர்த்தும் வகையில் பாடியவர் திரு. செல்லப்பா என்றார்.

வன்னிப் பிராந்திய தளபதி திரு. தீபன் தேனிசை செல்லப்பாவுக்கு பொன்னாடை போர்த்திக் கௌரவித்தார்.

பல்லாயிரக்கணக்கான மக்கள் கலந்து கொண்ட இந்த நிகழ்ச்சியில் கிளிநொச்சி மாவட்ட மகளிர் பொறுப்பாளர் பிரபா, வன்னிப் பிராந்திய கலை கலாசார பொறுப்பாளர் திரு. போசன் ஆகியோரும் உரையாற்றினர்.

நிகழ்ச்சியின் ஆரம்பத்தில் இறந்த போராளிகளுக்கும் போராட்டத்தின் போது இறந்த பொதுமக்களுக்கும் அஞ்சலி செலுத்தும் முகமாக இரண்டு நிமிடம் மௌன அஞ்சலி செலுத்தப்பட்டது. (ஒ-76)

### வருடாந்த உற்சவம் நடைபெறாது

ஜூன் மாதத்தில் நடைபெற விருந்த ஒட்டுசுட்டான் தான் தோன்றீச்சரர் ஆலய வருடாந்த உற்சவம் புனரமைப்பு வேலைகள் காரணமாக இவ்வருடம் நடைபெற மாட்டாது என ஆலய பரிபாலன சபை அறிவித்துள்ளது. ஆகஸ்ட் மாதத்தில் மகாகும்பாபிஷேகம் நடைபெறும்.

### தபால் நிலையம்

ஒட்டுசுட்டான் பகுதியில் நவீன வசதிகளுடன் கூடிய புதிய தபால் நிலையம் ஒன்று அமைக்கப்பட்டு வருகின்றது (இ-126)

## நாணய மாற்று விகிதம்

16-05-1990

இலங்கை மத்திய வங்கிக்கும் வர்த்தக வங்கிகளுக்கும் இடையிலான உடன் மாற்றுவிகிதம்:-

| | | வாங்குதல் | விற்றல் |
|---|---|---|---|
| 100 | இந்திய ரூபா | 231.26 | 232.22 |
| 100 | அமெரிக்க டொலர் | 3997.15 | 4002.85 |
| 100 | ஸ்ரேர்லிங் பவுண்ட் | 6652.47 | 6684.53 |
| 100 | ஜேர்மன் மார்க் | 2432.28 | 2440.27 |
| 100 | பிரெஞ்சு பிராங்க் | 713.31 | 726 31 |
| 100 | ஜப்பானிய யென் | [illegible] | [illegible] |

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

## வாசகர் திருமுகம்

### 2 நேரப் பாடசாலையும் மாணவர் நிலையும்

20-04-90 திகதியிடப்பட்ட பிரதேச கல்விப் பணிப்பாளரின் சுற்றறிக்கைக் கிணங்க பாடசாலை இரு நேரமாக இயங்கி வருகின்றது. ஆயினும் மதிய உணவிற்காக மாணவர்கள் வீடு செல்லக் கூடாது எனவும் மதிய உணவு வழங்குவது இடைநிறுத்தப்படக்கூடாதெனவும் கூறப்பட்டுள்ளது.

பாடசாலை மதிய உணவுக்கென பணம் எதுவும் அனுப்பப்படவில்லை ஆயினும் சில அதிபர்கள் சுற்றறிக்கைக்குப் பயந்து தமது சொந்தப் பணத்தைச் செலவிட்டு மதிய உணவை ஒரு சில நாள் வழங்கினர். இவ் மதிய உணவுப் பணம் இதுவரை பாடசாலைகளுக்குக் கிடைக்கவில்லை.

பாடசாலை மதியவேளைக்குப் பின் மாணவர்கள் விடு செல்ல அதிபர்களால் அனுமதிக்கப்படுவதில்லை. உணவும் வழங்கப்படுவதுமில்லை. இந் நிலையில் பிற்பகல் மூன்று மணிவரை பசியால் துடிக்கும் மாணவர்கள் கல்வியில் நாட்டத்தை செலுத்த முடியுமா?

சு. நந்தகுமார். சரவெட்டி.

### கசிப்பின் தொல்லை

புத்தூர் கிராம சபைப் பகுதியில், பொதுவாக மத்திய சந்தைக்கு அண்டிய வட்டாரத்தில் கசிப்பின் தொல்லை பெருகியுள்ளது. ஆண்கள் குடித்துவிட்டு சண்டை செய்கிறார்கள். மனைவியருக்கு அடித்து தொல்லை செய்கிறார்கள்.

இதைத் திருத்த வழியில்லையா?

புத்தூர் வாசி.

### பஸ் சேவை

சாவகச்சேரி — சங்கானை (775) பஸ் சேவை மீண்டும் ஆரம்பிக்கப்படுமா? எப்போது?

இ. செல்வன், சங்கானை மத்தி.

## செய்திக்கொத்து

### அமைச்சுக்கு புதிய கட்டடம்

முல்லைத்தீவு மே 18

ஒன்றிணைக்கப்பட்ட புனர் வாழ்வு, புனரமைப்பு திட்டமிடல் அமைச்சுக்கென முல்லைத்தீவு செயலகத்துக்கு அருகே கட்டப்பட்ட இரு மாடிக்கட்டடத்தை முல்லை மாவட்ட அரச அதிபர் திரு. க. பொன்னம்பலம் அண்மையில் திறந்து வைத்தார்.

இக்கட்டட வளவை இப்பகுதி சனசக்திக் குழுக்களைச் சேர்ந்தோர் சிரமதானப் பணி மூலம் துப்புரவு செய்து அருகே சிரற்றுக் கிடந்த வீதிகளையும் செப்பனிட்டு வருகின்றனர். (ப-29)

### சான்றிதழ்

திருகோணமலை மே 18

சர்வோதய இயக்கத்தினரால் நடத்தப்பட்ட இயந்திர சாதன, மரவேலைப் பயிற்சியில் சித்தி எய்திய மாணவர்களுக்கு சான்றிதழ்களும் இலவசமாக மரவேலை உபகரணங்களும் உப்பு வெளியிலுள்ள சர்வோதய பிரதேச கல்வி அபிவிருத்தி நிலையத்தில் வைத்து வழங்கப்பட்டன. இந்த நிகழ்ச்சி உதவி அரசாங்க அதிபர் திரு ரி. கோணமலை தலைமையில் நடைபெற்றது. (இ 15)

### சிங்கப்பூர் பயணம்

பருத்தித்துறை மே 18

ஐந்துபேர் கொண்ட பொலிஸ் குழு ஒன்றுபுலமைப் பரிசில் பெற்று சிங்கப்பூர் சென்றுள்ளது. இக்குழுவினர் சிங்கப்பூரில் போக்குவரத்து சம்பந்தமான விசேஷ பயிற்சி பெறவுள்ளனர் புலோலி மேற்கைப் பிறப்பிடமாகக் கொண்ட திரு. டிலீப்குமார் செல்வராஜா இக்குழுவுக்கு தலைமை வகிக்கிறார் (இ-18)

### சுயதொழிலுக்கு கடனுதவி

முல்லைத்தீவு மே 18

முல்லைத்தீவு உதவி அரச அதிபர் பிரிவில் உள்ள முல்லை மேற்கு முல்லை - வடக்கு கிராமசேவையாளர் பகுதிகளில் சுயதொழில் முயற்சிகளில் ஈடுபடுவோருக்கு கடனுதவி வழங்கப்படவேண்டும் என உதவி அரச அதிபர் திரு. வே. கந்தசாமி அரசுக்கு சிபார்சு செய்துள்ளார்.

மீன்பிடிப்பு, கருவாடுபதனிடல், மாட்டுப்பண்ணை, தச்சுவேலை என்பவற்றில் ஈடுபடுவோர் தேவைப்படும் உபகரணங்களை வாங்க சனசக்தித் திட்டத்தின்கீழ் சுயதொழில்வாய்ப்புக் கடன் பெறுவர் எனத் தெரிவித்த உதவி அரச அதிபர் விரைவில் இலங்கை வங்கி இவ்வுதவியை வழங்க ஏற்பாடு செய்யும் என்றார். (ப-92)

### மோசடி

கோப்பாய் பகுதியில் சில மோசடிக் கும்பல்கள் கோவில் திருப்பணி வேலைகளுக்கென பணம் சேகரித்து வருகின்றனர் என்று கூறப்படுகிறது (+-72)

### ஞாபகார்த்த நூலகம்

கண்டி தெல்தெனியா ஆற்றில் குளிக்கும் போது அகால மரணமடைந்த இலங்கை நிர்வாக சேவைக்குத் தெரிவான ஒரேயொரு தமிழ் இளைஞரும், நெடுந்தீவு கிழக்கு சனசமூக நிலையத் தலைவருமான திரு. ப. இரகுபதியின் நினைவாக மேற்படி சனசமூக நிலையத்தில் அன்னாரது உருவபடம்எதிர்வரும் 29 ஆம் திகதி திறந்துவைக்கப்பட்டு ஞாபகார்த்த நூலகம் ஒன்றும் அமைக்கப்படும் என செயலாளர் திரு. ம. சேவியர் தெரிவித்தார். (இ-111)

### விசர் நோய் தடுப்பூசி

பச்சிலைப்பள்ளி பிரதேசத்தில் வீடுகளில் வளர்க்கப்படும் நாய்களுக்கு விசர் நோய்த் தடுப்பூசி போடும் வேலைகளை பளைப் பகுதி பொதுச் சுகாதாரப் பரிசோதகர் திரு. ஆர். எல். சேவியரும், கால்நடை அபிவிருத்திப் போதனாசிரியர் திரு. கே. காசிப்பிள்ளையும் இணைந்து மேற்கொண்டு வருகின்றனர்.

இவ்வேலைத் திட்டத்திற்கு பூரண ஒத்துழைப்புக் கொடுக்குமாறு பளை உதவி அரசாங்க அதிபர் திரு. எஸ். கந்தசாமி சகல கிராமசேவையாளர்களையும், பொதுமக்களையும் கேட்டுள்ளார். (இ-51)

## நிக்கரகுவா அரச இயந்திரம் வேலை நிறுத்தத்தால் பாதிப்பு

மனாகுவா, மே 17

நிக்கரகுவாவில் அரசியல் நெருக்கடி ஒன்று ஏற்பட்டுள்ளது.

பதவி விலகிய ஜனாதிபதி ஒற்றேகாவுக்கு ஆதரவான அரசு ஊழியர்கள் ஐம்பதினாயிரம் பேர் 200 சதவீத சம்பள உயர்வு கோரி வேலை நிறுத்தம் செய்து வருகின்றனர்.

இதனால் சகல அரசுத் திணைக்களங்களின் பணிகளும் ஸ்தம்பித்துள்ளன. வேலை நிறுத்தம் செய்யும் ஊழியர்கள் அரசு அலுவலகங்களை முற்றுகையிட்டுள்ளனர்.

ஜனாதிபதி வயலெட்டா ஷிமொறா அரசைக் கவிழ்க்கும் நடவடிக்கையாக இந்த வேலை நிறுத்தம் கருதப்படுகிறது. (எ)

## 6 ஆவது ஆண்டு நினைவஞ்சலி



**Dr. N. T. மூர்த்தி**

தோற்றம்: 01-02-1932 மறைவு: 23-04-1984

திதி: 18-05-1990

ஆண்டு ஆறு சென்றாலும் ஆறுமோ எங்கள் உள்ளம்?
பாசமுடன் வாழ்ந்தோமே பாழும்விதி பிரித்ததுவே!
உங்கள் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கும்:

அன்பு மனைவி, பிள்ளைகள்
நளினி, முகுந்தன், சயந்தன், அஜந்தன்.

42, இராஜ வீதி,
நல்லூர்,
யாழ்ப்பாணம். (13025)

## 31ஆம் நாள் நினைவஞ்சலி



**அமரர் பொன்னம்மா கந்தையா**

அன்னையின் மடியில்: 07 - 05 - 1927 இறைவன் அடியில்: 18 - 04 - 1990

எம்மை ஆறாத்துயரில் வீழ்த்தி மீளாத்துயில் கொண்ட எங்கள் ஆருயிர் இதய தீபமே எங்கள் இல்லத்தில் மங்காத ஒளி வீசி எங்களுக்காக வாழ்ந்து எல்லா வகையிலும் உறுதுணையாக நின்று எங்களை வாழ வைத்து எங்களுக்காக ஜோதியாக நின்ற அருமைத் தெய்வமே நீங்கள் எங்களை விட்டுப் பிரிந்தாலும் இன்னும் எங்களுடன் வாழ்ந்து கொண்டே இருக்கிறீர்கள் தினமும் உங்களைப் பூஜித்துக் கொண்டே இருப்போம்

கணவர்,
மக்கள், மருமக்கள்.

''சந்தபவனம்''
சந்தையடி ஒழுங்கை,
மானிப்பாய் [3572]

★இந்திய அரசியலைக் கலக்கி வரும்

# போபர்ஸ் பேர ஊழல் விசாரணையில் திருப்பம்; முழுவிபரங்களையும் வெளியிட சுவீடன் சம்மதம்!

### ராஜீவ் காந்திக்கு புதிய நெருக்கடி

ஸ்டொக்ஹோம், மே 17

இந்திய அரசியலைக் கலக்கி வரும் போபர்ஸ் பீரங்கி ஊழலில் சம்பந்தப்பட்ட அனைவரினதும் பெயர்கள் அடங்கிய இரகசிய தஸ்தாவேஜுகள் அனைத்தையும் இந்திய அரசிடம் ஒப்படைக்க சுவீடன் அரசு ஒப்புக் கொண்டுள்ளது.

இத்தகவல்கள் அடங்கிய ஆவணங்கள் புதுடில்லிக்குக் கிடைத்ததும் ஊழலில் சம்பந்தப்பட்ட அனைவரின் பெயர்களும் அம்பலமாகும் என்று அறிவிக்கப்படுகிறது.

பிரதமராக ராஜீவ் காந்தி இருந்தபோது போபர்ஸ் பீரங்கிகள் சுவீடனிடமிருந்து வாங்கப்பட்டன.

இந்த மூவாயிரம் கோடி ரூபாய் கொள்வனவில் தரகுப் பணமாக இலஞ்சப் பணத்தில் 500 கோடி ரூபாவை இந்தியர்கள் சிலர் பெற்றனர். யார் இந்த இந்தியத் தரகர்கள் என்ற கேள்வி ராஜீவ் அரசுக் காலத்தில் எழுப்பப்பட்டது.

இதை ராஜீவ் அரசு மூடி மறைப்பதாக திரு. வி. பி. சிங் தலைமையிலான தேசிய முன்னணி உட்பட பல எதிர்க் கட்சிகள் அப்போது குற்றஞ் சாட்டின.

போபர்ஸ் பேர ஊழல் குற்றச்சாட்டே, ராஜீவ் அரசு கடந்த நவம்பர் தேர்தலில் தோற்கடிக்கப்பட்ட முக்கிய காரணமாக இருந்தது.

இது தொடர்பாக ராஜீவ் காந்தியின் நண்பர்களான வர்த்தகப் பிரமுகர்கள் இந்துஜா, வின்சத்தா ஆகியோர் மீது இரகசியப் பொலீஸார் புதுடில்லி நீதிமன்றத்தில் வழக்குப் பதிவு செய்துள்ளனர்.

இதனிடையில் ராஜீவின் நெருங்கிய நண்பரான இந்தி நடிகர் அமிதாப்பச்சன் புதுடில்லியில் 150 ஏக்கர் வாங்கியுள்ளது பற்றி பூரண விசாரணை நடத்தும்படி மத்திய அரசுக்கு வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது. (எ)

### இந்தியா கோரிக்கை

புதுடில்லி, மே 17

பாகிஸ்தானுக்கு மிராஜ் சண்டை விமானங்களை விற்பது பற்றி புனராலோசனை செய்யும்படி இந்தியா, அவுஸ்திரேலியாவைக் கேட்டுள்ளது. (எ)

## இருமனம் கலந்த திருமணம்; சீனாவில் இல்லைஎனத்தகவல்!

பீக்கிங், மே 17

சீன மக்கள் மத்தியில் நடத்தப்பட்ட ஆய்வில் அவர்களின் தாம்பத்திய வாழ்க்கை அவ்வளவு திருப்திகரமாக அமையவில்லை என்று தெரிய வந்துள்ளது

பாலுறவில் அதிருப்தி, திருமணத்தில் மகிழ்ச்சியின்மை இகற்த பல தம்பதிகள் ஆளாகியிருப்பதாக சமூகவியல் நிபுணர் ஒருவர் தெரிவித்தார்.

விவாகரத்துப் பெறுவதை தம்பதிகள் வெறுப்பதால் திருப்திகரமில்லாத நிலையிலும் குடும்ப வாழ்வைக் கொண்டுபோக வேண்டி உள்ளது என்று ஷாங்காய் பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த சமூகவியலாளர் லியூ டாலிங் தெரிவித்தார். (எ)

### லித்துஏனியாவின் புதிய யோசனை

வில்னியஸ், மே 17

தன்னிச்சையான சுதந்திர பிரகடனம் தொடர்பாக லித்துஏனியாவுக்கும் சோவியத் மத்திய அரசுக்கும் ஏற்பட்டுள்ள தகராறுக்கு இணக்கமான தீர்வு காணப்படும் சூழ்நிலை ஏற்பட்டிருப்பதாகக் கூறப்படுகிறது.

பிரச்சினையைத் தீர்ப்பது தொடர்பாக புதிய யோசனைகளை லித்துஏனியா அரசு அதிபர் கோர்பச்சேவுக்கு சமர்ப்பிக்க இருக்கின்றது.

இதற்காக லித்துஏனிய பிரதமர் மாஸ்கோ சென்றுள்ளார். (எ)

### பேச்சுக்களை நடத்துக

சுதந்திர பிரகடனம் செய்த பால்டிக் குடியரசுகளான எஸ்தோனியா, லற்வியா. லித்துஏனியா ஆகியன தங்களுடன் பேச்சுக்களை நடத்தும்படி சோவியத் அதிபர் கோர்பச்சேவை கோரியுள்ளன. (எ)

## மனிதனை நோய் வராது காப்பாற்றும் காய்கறி உணவு வகைகள்!

ஜெனிவா, மே 17

காய்கறிகளை உண்ணுவதன் மூலம் பெரும்பாலான நோய்களை மனிதன் தவிர்க்க முடியும் என்று உணவு முறை பற்றி அமெரிக்க விஞ்ஞானிகள் நடத்திய ஆராய்ச்சியில் தெரிய வந்திருக்கிறது.

மனிதனின் உணவுப் பழக்க வழக்கங்கள்பற்றி கொர்னெல் பல்கலைக் கழக விஞ்ஞானி திரு. ரி. கொலின் காம்பெல் ஆராய்ச்சி ஒன்றை பெரிய அளவில் நடத்திஇருக்கிறார்.

இறைச்சி மற்றும் மாமிச உணவு வகைகள் தான் மனிதனை பெரும்பாலான நோய்கள் தாக்குவதற்குக் காரணம் என்று இந்த ஆய்வில் தெரிய வந்துள்ளது.

தாவர உணவை மனிதன் தொடர்ந்து உட்கொண்டுவரின் இருதய நோய்கள், புற்றுநோய்கள், நீரிழிவு முதலியன மனிதனைத்தாக்கும் வாய்ப்பு குறைகிறது என்று திரு. கொர்னெல் காம்பெல் சீனாவில் இது தொடர்பாக நடத்திய பூர்வாங்க ஆய்வில் தெரியவந்துள்ளது

மனிதன் விலங்கு உணவைச் சாப்பிடுவதற்கான காரணங்கள் பற்றி திரு. காம்பெல் புத்தகம் ஒன்றை எழுதி வருகிறார் (எ)

## சோவியத்தில் எயிட்ஸ் நோய் அதிகரிப்பதாக எச்சரிக்கை

இதுவரைக்கும் ரஷ்யாவில் எயிட்ஸ் நோய் பரிசோதனைக்கு 5 கோடி 50 லட்சம் பேர் உட்படுத்தப்பட்டுள்ளனர்.

இதன் பயனாக 984 பேருக்கு எயிட்ஸ் நோய் உள்ளதாக கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. இதில் 502 பேர் வெளிநாட்டவர்களாவர். இவர்களில் 19 பேர் ஏற்கனவே இறந்துவிட்டனர்.

இத்தகவலை சோவியத் சுகாதார அமைச்சர் திளிஸவ் தெரிவித்தார்.

தகுந்த பாதுகாப்பு நடவடிக்கைகள் எடுக்கப்படாவிட்டால் 1990 ஆம் ஆண்டு எயிட்ஸ் நோயாளிகளின் தொகை 1,625 ஆக அதிகரிக்கும்.

2,000 ஆண்டளவில் 15 லட்சம் ஆக இது உயரும் எனவும் டாக்டர்கள் எச்சரிக்கை விடுத்துள்ளனர்.

எயிட்ஸ் நோயினை தடுப்பதற்கான முயற்சிகளை எடுப்பதில் சோவியத் சுகாதார அமைச்சு கூடுதல் அக்கறை செலுத்தி வருகிறது, என பேச்சாளர் ஒருவர் தெரிவித்தார். (ஏபிஎன்)

## சீனாவில் மனித உரிமை மீறல்; மன்னிப்புச் சபை கவலை!

லண்டன், மே 17

ஜனநாயகக் கிளர்ச்சியில் ஈடுபட்டதற்காக இன்னமும் 650 சீன மாணவர்களை பீகிங் அரசு சிறையில் வைத்திருப்பதாக சர்வதேச மன்னிப்புச் சபை தனது பிந்திய அறிக்கை ஒன்றில் தெரிவித்து உள்ளது.

சீனாவில் மனித உரிமை மீறல் தொடருவதாகவும் மன்னிப்புச் சபை கவலை தெரிவித்துள்ளது.

விசாரணையின்றி ஆயிரக்கணக்கானோரை பீகிங் அரசு மரண தண்டனைக்குள்ளாக்கி விட்டதாகவும் மன்னிப்புச்சபையின் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது (எ)

## தேவை

பின்வரும் பதவிகளுக்கு ஆண்கள் மட்டுமே தேவை.

1. இயந்திர இயக்குநர்
2. அச்சுக் கோர்ப்பாளர்
3. பைண்டர்ஸ் [Binders]

அத்துடன் மேற்படி பதவிகளுக்கான பயிலுநர்களும் தேவைப்படுகின்றனர். எனவே சேரவிரும்புவோர் கல்வி, நற்சாட்சிப் பத்திர மூலப்பிரதிகளுடன் நேரில் வரவும்—

முகாமையாளர்,
உதயன்.
15, 2 ஆவது ஒழுங்கை,
மின்சார நிலைய வீதி,
யாழ்ப்பாணம்.

[சி-4519]

பலரின் வேண்டுகோளுக்கிணங்க

**இலங்கை நிருவாக சேவை (SLAS)**

**போட்டிப் பரீட்சைக்கான**

## விசேட பயிற்சி வகுப்புகள்

**2 ஆவது பிரிவு**
**ஆரம்பம் 19-05-1990**
(பிற் பகல் 2 — 5)

★ இதுவரை விண்ணப்பிக்காதவர்கள் 18 - 05 - 90 ன் முன் விண்ணப்பிக்கலாம்.

★ விண்ணப்பப் படிவங்களை எம்மிடம் பெற்றுக் கொள்ளலாம்.

பட்டதாரிகளுக்கும் / அரச உத்தியோகத்தர்களுக்கும் ஓர் அரிய சந்தர்ப்பம்

★ இலவச பாடக்குறிப்புகள்
★ கட்டணம் ரூபா 300/-
★ விரிவுரைகள் சனி, ஞாயிறு, விடுமுறை தினங்களில்

**ASTAN Institute**

**166/1, Hospital Road, Jaffna.**
(A. S. சங்கரப்பிள்ளை கட்டிடம் 1ஆம் மாடி)

[சி-5024]

## இரு கரம் கோர்த்தே வர்த்தகம் வளர்ப்போம்

நீங்கள் வடக்குக் கிழக்குப் பிரதேசத்தில் வாழ்பவராகவும் அங்கு வர்த்தக முயற்சிகளில் ஈடுபடுபவராகவும் இருக்கின்றீர்களா? கொழும்பு ஏஜன்ஸீஸ் நிறுவனம் அப்பிரதேசத்தில் வாழும் தனி நபர்களோடும் கம்பனிகளோடும் இணைந்து அப்பிரதேச மக்களின் அதிகரித்து வரும் தேவைகளைப் பூர்த்திசெய்யக் காத்திருக்கிறது.

உங்கள் பிரதேசத்தில் கட்டடப் பொருள், தொலைத் தொடர்புக் கருவிகள், எரிபொருள் நிரப்பு நிலைய உபகரணங்கள், இரும்புச் சாமான்கள், சுகாதார இணைப்புக்கள் என்பவற்றுக்கான கிராக்கி இருப்பின் எம்மோடு தொடர்பு கொள்ளுங்கள்.

நீங்களும் கொழும்பு ஏஜன்ஸீஸ் நிறுவனமும் இணைந்து வியாபாரத்தை விருத்திசெய்யலாம்

CA

தொடர்புகொள்ளுங்கள்:

**முகாமைத்துவப் பணிப்பாளர்,**
300, 304, காலி வீதி,
**கொழும்பு -3**
தொலைபேசி - 575294, 573542, 573463.

## 6ஆம் ஆண்டு நினைவஞ்சலி



திருமதி

**டாக்டர் அமிர்தகௌரி பகீரதன்**

மலர்வு: 20 - 06 - 1950 உதிர்வு: 18 - 05 - 1984

''எம்மை ஆறாத்துயரத்தில் ஆழ்த்தி
நீர் மீளாத் துயில் கொண்டு
ஆண்டுகள் ஆறு ஆனதுவோ''

உங்கள் ஆத்ம சாந்திக்காய் நாம் இதயமதில் இறைஞ்சுகின்றோம்.

கணவன், மனைவி, பெற்றோர்,
உறவினர்.

''சபாரட்னம் லொட்ஜ்''
பலாலி றோட், திருநெல்வேலி,
யாழ்ப்பாணம். [13136]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## புதிய உயர் கல்லூரி

ஆரியகுளம் சந்தி, யாழ்ப்பாணம்.

A/L 90

வர்த்தகம் - தேவா

வினா - விடை வகுப்பு

ஆரம்பமாகிவிட்டன!

(சி/5045)


16 ஆம் நாள்

## அந்தியேட்டி அழைப்பிதழ்



மலர்வு: 1909 - 10 - 20

உதிர்வு: 1990 - 05 - 04

இணுவில்

### திரு. இராமசாமி குழந்தைவேலு

(இளைப்பாறிய ஆசிரியர் சிதம்பராக் கல்லூரி, வல்வெட்டித்துறை)


அக்கிரமக் காரரின் சூட்டிற்கிலக்காகி
அகால மரணமடைந்த அன்பு மகன்
பிரம்மானந்தமாம் மாமணியை
அப்பா நீயும் ஆசையுடன் பார்த்திடவோ?
அன்பு மக்கள் கையாலே அடி வாங்கி அழிந்தாயே !
மகனை புதைத்த கல்லறை காயுமுன்னே
தலையில் குருதி பெருக வீரமரணம் எய்தினையோ?
வல்வையின் தமிழ் மறவன் ஐயா நீ!
மரணிக்காத மாமேதையே மறைந்தனையோ?

உன் ஆத்ம சாந்திக்கு இறைஞ்சும்
அன்பு மகள் கமலம்

குறிப்பு: அந்தியேட்டி வைபவம் 20 – 05 – 90 அன்று இணுவிலில் அன்னாரது இல்லத்தில் நிகழும்.

இணுவில் (3587)

## 31 ம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்



அமரர்

### முருகேசு - விக்கினேஸ்வரன்

திருவேங்கடத்தான் அழைப்பை ஏற்று எம்மையெல்லாம் விட்டுப் பிரிந்த எங்கள் அன்புத் தெய்வத்தின் ஈமக்கிரியையின் போது மலர்வளையம் சாத்தியவர்கள், இரங்கல் செய்தி அனுப்பியவர்கள், நேரில் வந்து ஆறுதல் கூறி அன்னாரின் சடங்கு சிறப்பாக நடைபெற உதவிய உறவினர், நண்பர்களுக்கு எம் நன்றியை தெரிவித்துக் கொள்கிறோம்.

ஆறாத்துயரில் எம்மை ஆழ்த்திவிட்டு இறைவனடி சென்றுள்ள அமரரின் ஆத்மா சாந்தியடைய திருப்பதியானை பிரார்த்தித்து அஞ்சலி செலுத்துபவர்கள்.

மனைவி, பிள்ளைகள்,
தாய், சகோதரன், சகோதரிமார்,
உறவினர், நண்பர்கள்.

ஏழாலை மேற்கு,
சுன்னாகம். [13209]

பத்து லட்சம் ரூபா செலவில்

# தமிழ் இலக்கிய விழா ஜூலையில் கொழும்பில்

கொழும்பு மே 18

இந்து சமய கலாசார தமிழ் அலுவல்கள் துணை அமைச்சு நடத்தும் தமிழ் இலக்கிய விழா எதிர்வரும் ஜூலை மாதம் பிற் பகுதியில் நடக்கும்.

18 எழுத்தாளர்களும், தமிழ் இலக்கியத்துறைக்கு சேவையாற்றிய 7 பேரும் இவ் விழாவின் போது கௌரவிக்கப்படுவர்.

பணப் பரிசுகளும் விருதுகளும் அவர்களுக்கு வழங்கப்படும்.

ஐந்து நாட்கள் நடைபெறவுள்ள இவ் விழாவில்இலங்கை எழுத்தாளர்களின் புத்தகம் மற்றும் ஓவியம் சம்பந்தப்பட்ட கண் காட்சிகளும் இடம்பெறும்.

இந்த இலக்கிய விழாவை நடத்த பத்து லட்சம் ரூபா செலவிடப்படவுள்ளது.

## "எய்ட்ஸ்" நினைவு சேவை ஞாயிறன்று அனுஷ்டிப்பு

கொழும்பு, மே 18

குடும்பத்திட்டச் சங்கம் ஆண்டுதோறும் மே மாதம் 20 ஆம் திகதி 'எய்ட்ஸ்' நினைவு சேவை ஒன்றை இலங்கையிலும் அறிமுகப்படுத்த திட்டமிட்டு உள்ளது

இத்திட்டம் மெழுகுவர்த்தி நினைவுச சேவை' என்று அழைக்கப்படும்.

இதன் முக்கிய நோக்கம், எய்ட்ஸ் நோயினால் பீடிக்கப்பட்டவர்கள் குற்றவாளிகள் அல்லர்; எய்ட்ஸ் நோயினால் மரணித்தவர்கள் மறக்கப்படுவதில்லை' என்பதை வலியுறுத்துவதே.

மேலை நாடுகளில் இந்த நினைவுச் சேவை கடந்த ஏழு ஆண்டுகளாக இடம் பெற்று வருகிறது.

இந்த உயிர்கொல்லி எய்ட்ஸ் நோய் பற்றி ஒவ்வொரு ஆணும் பெண்ணும் அறிந்து கொள்ள வைப்பதும் இந்த இயக்கத்தின் இன்னொரு நோக்கமாகும்.

ஒவ்வொரு நாடும் சமூகமும் தங்களின் பாரம்பரிய பழக்க வழக்கங்களுக்கு ஏற்ப இந்த 'மெழுகுவர்த்தி நினைவு கூரும்' சேவையை அனுஷ்டிக்கலாம்.

ஒருங்கிணைக்கப்பட்ட கிராமிய குடும்ப சுகாதார திட்டத்தின் ஒத்துழைப்புடன் குடும்பக் கட்டுப்பாட்டுச் சங்கம் நாடு தழுவிய எய்ட்ஸ் நினைவுதின நிகழ்ச்சிகளை ஒழுங்கு செய்கிறது. (உ-எ)

### ஹமீத்---

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

அடுத்து அரசாங்கம் – விடுதலைப்புலிகள் உறவில் 'முறுகல்நிலை ஏற்பட்டிருப்பது தெரிந்ததே.

இந்த 'முறுகல்' நிலையை நீக்கும் முயற்சியில் அமைச்சர் ஹமீத் இந்தப் பேச்சுக்களின் போது ஈடுபடுவார் என எதிர்பார்க்கப்படுகிறது.

விடுதலைப் புலிகளும் இந்தப் பேச்சுக்களின்போது சில விடயங்களை 'வெட்டு ஒன்று துண்டு இரண்டாக' தெரிவிப்பார்கள் என்றும் எதிர்பார்க்கப்படுகிறது.

வடக்கு, கிழக்கு மாகாண சபைத்தேர்தல், ஆறாவது அரசமைப்புத் திருத்த நீக்கம் ஆகியவை திட்டவட்டமான ஒரு காலஎல்லைக்குள் மேற்கொள்ளப்படவேண்டும் என்றும் —

அதற்கானகாலஎல்லை உடனடியாக நிர்ணயம் செய்யப்படவேண்டும் என்றும் விடுதலைப்புலிகள்இந்தச்சந்திப்பின் போது வலியுறுத்திக் கூறுவர் என்று தெரியவந்தது.(உ-9)

### 6 வது திருத்த---

(1ஆம் பக்கத் தொடர்ச்சி )

மூலத்தை நாடாளுமன்றத்துக்கு கொண்டுவராமல்இழுத்தடித்து வருகிறது.

இந்த நிலையை முறியடிப்பதற்காகவே சில தமிழர் அமைப்புகள் ஒன்றுபட்டு இப் பிரேரணையைக் கொண்டுவருமாறு ஈழவர் ஜனநாயக முன்னணியைக் கோரியதாகவும்–

அதற்குத் தற்போது ஈ.ஜ.மு. இணக்கம் தெரிவிக்கப்பட்டிருப்பதாகவும் கூறப்படுகிறது. (உ-9)

### கண்டனம்

கொழும்பு, மே18

மலையகமக்கள்முன்னணித் தலைவர் திரு. சந்திரசேகரன் கைதுசெய்யப் பட்டதற்கு யாழ். மாவட்ட ஈ. பி. ஆர், எல். எவ்வின் எம். பி. திரு. கே. பிரேமச்சந்திரன் கண்டனம் தெரிவித்துள்ளார்.

### கைதடியில் தாச்சிப் போட்டி

பச்சிலைப்பள்ளி, மே 18.

கைதடி நவசன சமூக நிலைய வெள்ளி விழாவை முன்னிட்டு தென்மாராட்சி ரீதியிலான தாச்சிப்போட்டி நாளை 19 ஆம் 20 ஆம் திகதிகளில் கைதடி நவபுரம் விளையாட்டு மைதானத்தில் நடைபெறும்.

இப் போட்டியில் தென்மாராட்சியின் 32 முன்னணி விளையாட்டுக் கழகங்கள் பங்குபற்றவுள்ளன என்று விளையாட்டு குழுத்தலைவர் இ. சந்திரோதயம் தெரிவித்தார். (தி-117)

### இறுதி---

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

வின் சடங்குகளில் கலந்து கொள்வதற்காக அவரின் 16 நெருங்கிய உறவினர்கள் நேற்று மட்டக்களப்பில் இருந்து இந்த விமானத்தில் கொழும்பு வந்திருந்தனர். (இ-2)

## மண்டலாபிஷேக பூர்த்திவிழா

யாழ், நாயன்மார்கட்டு அருள்மிகு ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தான மண்டலாபிஷேக பூர்த்தி இன்று காலை 8. மணிக்கு சங்காபிஷேகமும் மாலை 5. மணிக்கு அம்பிகை தெரு உலாவும் நடைபெறும்.

இங்ஙனம்,

உபயகாரர்: திரு. கனகரத்தினம்

13213 (வடபிரந்திய போக்குவரத்து சபைஅதிகாரி)


## NEW BECON

ஸ்ரான்லி ரோட் யாழ்ப்பாணம்.

A/L 90

PAPER CLASS

பொருளியல் — லோகசிங்கம்
கணக்கியல் — யோகராஜா
வர்த்தகம் — ஜெயராமன்
அளவையியல் — விக்கி
தமிழ் — மீரா
இந்துநாகரீகம் — கிருஸ்ணா

ஆரம்பம்: 19 - 05 - 90

சனி காலை 7 மணிக்கு (13210)


## சந்தை விலைகள்

சுன்னாகம், திருநெல்வேலி, யாழ்ப்பாணம் சந்தைகளில் நேற்றைய மரக்கறி விலைகள் — கிலோ அடிப்படையில்;

| | சுன்னாகம்: | திருநெல்வேலி: | யாழ்ப்பாணம்: |
|---|---|---|---|
| கத்தரி | ரூ. 20 00-20.00 | ரூ. 10.00-14.00 | ரூ. 22 00-24.00 |
| வாழைக்காய் | ரூ. 7.00- 9 00 | ரூ. 6.00- 7.50 | ரூ. 8.00-10.00 |
| பயிற்றங்காய் | ரூ. 14 00-16.00 | ரூ. 7.00-10.00 | ரூ. 16.00-18.00 |
| பாகற்காய் | ரூ. 20.00-24 00 | ரூ. 8.00-12 00 | ரூ. 22.00-24.00 |
| கோவா | ரூ. 14.00 16.00 | ரூ. 11.00-12 00 | ரூ 16.00-18.00 |
| லீக்ஸ் | ரூ. 23.00-24 00 | ரூ. — | ரூ. 23.00-24.00 |
| கரட் (மலைநாடு) | ரூ. 22.00-24 00 | ரூ. 19.00-20.00 | ரூ. 20.00-24 00 |
| பீற்றூட் | ரூ. 12.00-14 00 | ரூ. 7.00- 9.00 | ரூ. 14.00-16.00 |
| பீன்ஸ் | ரூ. — | ரூ. 15.00-18.00 | ரூ. 24.00-28.00 |
| பூசணி | ரூ. 5.00- 6 00 | ரூ. 8 00-10 00 | ரூ. 5.00- 7.00 |
| பச்சைமிளகாய் | ரூ. 16.00-18.00 | ரூ. 12.00-15.00 | ரூ. 16.00-20.00 |
| வெங் (வேதாளம்) | ரூ. 55.00-60.00 | ரூ. 45.00-55.00 | ரூ. 58.00-60.00 |
| வெங்காயம் (சிறிய) | ரூ. 50.00-55 00 | ரூ. 30.00-45.00 | ரூ. 48 00-50.00 |
| உருளைக்கிழங்கு | ரூ. 28.00-30.00 | ரூ. 28.00-30.00 | ரூ. 30.00-32.00 |
| மரவள்ளிக்கிழங்கு | ரூ. 6.00- 7.00 | ரூ. 6 00- 7.00 | ரூ. 10 00-12.00 |
| வெண்டைக்காய் | ரூ. 16.00-18.00 | ரூ. 13 00-15 00 | ரூ. 20.00-24.00 |

## வேலணை வைத்தியசாலை அபிவிருத்திசபை

யாழ்ப்பாணம், மே 18

வேலணை அரசினர் வைத்தியசாலை அபிவிருத்திச்சபை பொதுக்கூட்டம் எதிர்வரும் 20 ஆம் திகதி ஞாயிற்றுக் கிழமை காலை 10மணிக்கு வைத்திய அதிகாரி திரு. ஆ. திருநாவுக்கரசு தலைமையில் நடைபெறும்.

### மாகாண---

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

எந்த தனிப்பட்ட நபரும் அல்லது குழுக்களும் ஆயுதங்களை வைத்திருக்கவோ கொண்டு செல்லவோ அனுமதிக்கப்படக் கூடாது.

வடக்கு, கிழக்கு மாகாணத்தில் எல்லாத் தீவிரவாதக் குழுக்களினதும் அரசியற்கட்சிகளினதும் பிரதிநிதிகளைக் கொண்ட இடைக்கால நிர்வாகம் அமைக்கப்பட வேண்டும்.

இந்த நிர்வாகம் ஆறுமாதத்துக்குக் குறையாமலும் ஒன்பது மாதத்துக்கு மேற்படாமலும் மாகாணத்தின் நிர்வாகத்துக்குப் பொறுப்பாக இருந்து மாகாணசபைத்தேர்தலை ஏற்பாடு செய்து அதை நடத்தவேண்டும்.

எந்தவொரு தனி நபரும் அல்லது குழுக்களும் வடகிழக்கு மாகாணத்தின் சுதந்திரமான பத்திரிகை வெளியீடுகளை கட்டுப்படுத்தவோ மிரட்டவோ கூடாது.

தமிழீழ விடுதலைப் புலிகள் கைதுசெய்த அனைவரும் உடனடியாக விடுதலை செய்யப்படவேண்டும்.

தமது கருத்துக்கு முரண்படும் வேறு அரசியற்கட்சியை அல்லது குழுக்களைச் சேர்ந்தோரைக் கடத்துவதும் நிறுத்தப்பட வேண்டும்.

சட்டம் ஒழுங்கை நிலைநாட்டும் விடயத்தில் பொலிஸைத் தவிர வேறு எந்த நபரும் அல்லது குழுக்களும் தலையீடு செய்யக்கூடாது

தேர்தல் நியமனப்பத்திரங்கள் தாக்கல் செய்யப்பட்ட நாளிலிருந்து தேர்தல முடிவுகள் வெளியாகும் வரை சர்வதேச குழுவொன்று பார்வையாளர்களாகத் தேர்தலைக் கண்காணிக்க வேண்டும்- இவ்வாறு புளொட் இயக்கம் அறிவித்துள்ளது. (உ-ப)

## தென்பகுதி மீனவர்கள் வடக்கே செல்ல வசதி செய்க!

### நாடாளுமன்றத்தில் தினேஷ்

கொழும்பு, மே 18

தென்பகுதி மீனவர்கள் வடக்கு, கிழக்குப் பகுதிகளுக்கு வந்து மீன் பிடிக்கத் தயங்குகிறார்கள். இவர்களுக்கு வேண்டிய வசதிகள் செய்து கொடுக்கப்பட வேண்டும். இதற்காக தமிழீழ விடுதலைப் புலிகளுடன் அரசு பேச்சு நடத்த வேண்டும்.

மக்கள் ஐக்கிய முன்னணித் தலைவர் தினேஷ் குணவர்த்தனா நேற்று நாடாளுமன்றத்தில் மேற்கண்டவாறு கோரிக்கை விடுத்தார்.

கடற்றொழிலாளர் ஓய்வூதியத் திட்ட சட்டமூல விவாதத்தில் திரு. தினேஷ் குணவர்த்தனா உரையாற்றினார்.

வடக்கு, கிழக்கு மீனவர்களிடம் விடுதலைப் புலிகள் வரி அறவிடுகிறார்கள். அரசு என்ன செய்துகொண்டிருக்கிறது? — என்று குணவர்த்தனா கேள்வி எழுப்பினார். (இ-2)

## முதலாவது பிறந்ததின வாழ்த்து



### ★ செல்வி ரேவதி ★

புங்குடுதீவு 5ஆம் வட்டாரத்தைச் சேர்ந்த கணேசலிங்கம் - விஜயராணி தம்பதிகளின் செல்வப் புதல்வி ரேவதி முதலாவது பிறந்த தினத்தை (18-05-90) இன்று தனது இல்லத்தில் மிகவும் குதூகலமாகக் கொண்டாடுகிறார். இவரை அன்பு அப்பா, அம்மா, அப்பப்பா, அப்பம்மா, தாத்தா, அம்மம்மா, சித்தப்பாமார், மாமிமார், கனடாவிலுள்ள பெரிய மாமா, அத்தை ஜேர்மனியிலுள்ள சின்னமாமா மற்றும் உற்றார், உறவினர்கள் அனைவரும் இவரை பெரியபுலம் விநாயகப்பெருமான் அருளால் அன்புடன் பண்பையும் அறிவுடன் செல்வமும் பெற்று பல்லாண்டு நலமுடன் வாழ வாழ்கவென வாழ்த்துகிறார்கள். (13216)


## ACCOUNTANCY EXAM FOR Nov. Dec 1990

**C. I. M. A.**
Stage I 19-05-1990
Stage II 09-06-1990
Stage III 09-06-1990

**A. A. T. (London)**
Prelim 19-05-1990
Inter 09-06-1990
Finals 09-06-1990

**A. A. T. (Sri Lanka)**
Stage I 19-05-1990
Stage II July 1990
Stage III July 1990

**I. A. B.**
Foundation 19-05-1990
Inter 09-06-1990
Finals 09-06-1990
AND

**I. D. P. M.**
Part I 19-05-1990

உங்கள் பதிவுகட்கு:

NORTH CEYLON TECHNICAL INSTITUTE
(Result Oriented Institute in North)
14, St. Peters Lane,
Hospital Road, Jaffna.

[சி-5026]


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

பாடசாலைப் பிள்ளைகளின் மதிய
உணவுத் திட்டத்திற்கு உகந்தது.

"ஜீவாகாரம்"

இதில் தேவையான அளவு கலோரி, புரதம், விற்றமின், தாதுப்பொருட்கள் அடங்கி உள்ளன.

அண்ணா தொழிலகம்
இணுவில்.

# உதயன்

18 - 05 - 1990 வெள்ளிக்கிழமை

15 கிறாம்

அண்ணா கோப்பி

100 வீதம் சுத்தமானது

இது கைதேர்ந்த தொழிலாளர்களினால் காற்றுப்புகாவண்ணம் அடைக்கப்பட்ட பைக்கட்டுகளில் வெளிவருகிறது, இதை வாங்கிப் பாவித்து.

இதன் வெற்றுப் பைக்கட்டுகள் 25 கொடுத்து ஒரு அப்பியாசக்கொப்பியை இனாமாகப் பெற்றுக் கொள்ளவும்.

## மாகாணகல்விப்பணிப்பாளர்; சுந்தருக்கு பதவி உயர்வு

யாழ்ப்பாணம் மே 18

இதுவரை காலமும் யாழ். மாவட்டக் கல்விப்பணிப்பாளராகக்கடமையாற்றிவந்த திரு இ. சுந்தரலிங்கம் வடபிரதேச (வடமாகாண) கல்விப் பணிப்பாளராவும் நியமனம் பெற்றுள்ளார்.

யாழ் மாவட்டத்துடன் முல்லைத்தீவு, மன்னார், வவுனியா, கிளிநொச்சி ஆகிய மாவட்ட கல்வித் திணைக்களங்களுக்கும் அவர் இனிமேல் பொறுப்பாகவிருப்பார்.

புதிய நியமனம், பற்றிய அறிவிப்பை அண்மையில் திருகோணமலையில் நடைபெற்ற வடக்கு, கிழக்கு மாகாண கல்விப்பணிப்பாளர்கள் கூட்டத்தில் வைத்து மாகாணக் கல்வி அமைச்சின் செயலாளர் திரு. இ. ஜே. சற்குணராசா அறிவித்தார். (உ-10)

## இந்த ஆசிரியர்களுக்கு வடக்கிலிருந்து இடமாற்றம்

யாழ்ப்பாணம், மே 18

வெளிமாவட்டங்களில் இதுவரை கடமைபுரியாமல் யாழ் மாவட்டத்தில் பத்து ஆண்டு சேவையைப் பூர்த்தி செய்திருக்கும் 45 வயதுக்கு உட்பட்ட ஆசிரியர்கள் வெளி மாவட்டங்களுக்கு இடமாற்றம் செய்யப்படுவர்.

இந்த அடிப்படையில் இடமாற்றங்களை செய்வதற்கான ஏற்பாடுகளில் வடக்கு, கிழக்கு மாகாண கல்வி அமைச்சு ஈடுபட்டிருக்கிறது.

இதன் ஒரு கட்டமாக சகல ஆசிரியர்களினதும் சேவைக்கால விவரங்களை வடக்கு. கிழக்கு மாகாண கல்வி அமைச்சு யாழ். கல்வித் திணைக்களத்திடம் கோரியிருக்கிறது. (உ. 10)

## பயிற்சிப் பட்டதாரிகளும் இடமாற்றம் செய்யப்படுவர்

யாழ்ப்பாணம், மே 18

யாழ்ப்பாண மாவட்டத்தில் கடமையாற்றும் பயிற்சிப் பட்டதாரி ஆசிரியர்கள் அனைவரும் வெளிமாவட்டங்களுக்கு இடமாற்றம் செய்யப்பட்டுள்ளனர்.

இதற்கான பூர்வாங்க நடவடிக்கைகளை வடக்கு கிழக்கு மாகாண கல்வி அமைச்சு மேற்கொண்டுள்ளது.

தற்பொழுது யாழ். மாவட்டத்தில் சுமார் 95 பயிற்சிப் பட்டதாரிகள் கடமையில் இருப்பதாக கல்வித் திணைக்களம் தெரிவித்துள்ளது.

இவர்களுக்கான இடமாற்ற உத்தரவுகள் எந்த நேரமும் யாழ் கல்வித் திணைக்களத்துக்கு கிடைக்கலாம் என எதிர்பார்க்கப்பட்டது. (உ-10)

## வேலணை, மருதங்கேணியில் ஜனசக்தி முத்திரை விநியோகம்

யாழ்ப்பணம், மே 18

யாழ். மாவட்டத்தில் வேலணை, மருதங்கேணி உதவி அரசாங்க அதிபர் பிரிவுகளில் அடுத்த கட்டமாக ஜனசக்தி உணவு முத்திரைகள் வழங்கப்படவுள்ளன.

இதற்கான சகல ஆயத்தங்களும் யாழ் - செயலகத்தினால் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

ஜனசக்தி ஆணையாளரின் உத்தரவு கிடைத்ததும் இப்பகுதி மக்களுக்கு ஜனசக்தி கூப்பன்களை வழங்கும் வேலைகள் ஆரம்பமாகும் என செயலக வட்டாரங்கள் தெரிவித்தன.

யாழ்ப்பாண உதவி அரசாங்க அதிபர் பிரிவில் இத்திட்டம் பரீட்சார்த்தமாக ஆரம்பிக்கப்பட்டு வெற்றிகரமாக நடைமுறைப்படுத்தப்பட்டதை அடுத்தே வடமராட்சி உதவி அரசாங்க அதிபர் பிரிவுகளில் அதனை நடைமுறைப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது. ( உ - 10 )

### சுகாதாரத் தொழிலாளர் பதவி:

## பெரும்பான்மை இனத்தவரை திணிப்பதற்கு அரசு திட்டமா?

தம்பலகாமம், மே 18

மாகாண சுகாதார அமைச்சுக்கும் ஆஸ்பத்திரி நிர்வாகத்துக்கும் தெரியாமல் திருகோணமலை வைத்தியசாலைக்கு ஊழியர்களை நியமிக்கமத்திய அரசு முயலுகிறதா?

இந்தச் சந்தேகம் கடந்த ஞாயிறன்று சுகாதாரத் தொழிலாளர் பதவிக்கான நேர்முகப் பரீட்சைக்கு திடுப்பென்று வந்த பெரும்பான்மை இன மக்களை கண்டதும் ஏற்பட்டிருக்கிறது.

மத்திய அரசினால் நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்பட்ட கடிதங்களுடன் வந்த இவர்களைத் தெரிவு செய்ய உத்தியோகத்தர் எவரும்இருக்கவில்லை. இதனால் நேர்முகப் பரீட்சை இன்றியே இவர்கள் விடுதிரும்பினர்.

## வீடமைப்புக் கொடுப்பனவுகள்: பதிவு செய்யும் திகதி நீடிப்பு

### ஞாயிறன்று கடைசி நாள்

மாங்குளம், மே 18

முல்லைத்தீவு மாவட்டத்தில்வீடமைப்புக்கானகொடுப்பனவுகளை பெறுபவர்களை பதிவு செய்யும் காலக்கெடு மேலும் இம் மாதம் 20 ஆம் திகதி வரை நீடிக்கப்பட்டுள்ளது.

மார்ச் 20 ஆம் திகதி நடைபெற்றமுல்லைத்தீவுமாவட்ட புனரமைப்பு கூட்டிணைப்புக் குழுக்கூட்டத் தீர்மானத்துக்கிணங்க இத்திட்டத்தின் கீழ்க்கடன் பெறுவோரைப் பதிவு செய்யும் திகதி மார்ச் 20 என முன்னர் முடிவு எடுக்கப்பட்டது.

மேலும் பொது மக்களின் வேண்டுதலை அடுத்து மே மாதம் 20 ஆம் திகதி வரை நீடிப்பதென ஏப்ரல் 24 ஆம் திகதிநடைபெற்ற மற்றொரு கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது.

இதற்கிணங்க வீடமைப்பை மேற்கொள்ள விருப்பம் தெரிவிக்கும் கடிதத்தை சம்பந்தப்பட்ட உதவி அரசாங்க அதிபர்களுக்கு சமர்ப்பிப்பதற்கான இறுதித்திகதி இம் மாதம் 20 ஆம் திகதி ஆகும். வீடமைப்பு வேலைகளை ஆரம்பிப்பதற்கான இறுதித் திகதி ஜூன் 20 ஆம் திகதி ஆகும். [இ-94]

## குமண பகுதியில் 12 யானைகளின் சடலங்கள்

கொழும்பு, மே 18

கடந்த செவ்வாய்க் கிழமை குமண பகுதியில் பன்னிரண்டு யானைகள் இறந்து கிடக்கக் காணப்பட்டன.

யானைகளின் உடல்களில் துப்பாக்கிச் சூட்டுக்காயங்கள் இருந்தன,

தந்தங்களை எடுப்பதற்காக இந்த யானைகள் கொல்லப்பட்டிருக்கலாம் என்று சிரேஷ்ட பொலீஸ் அதிகாரி ஒருவர் சொன்னார் (இ-எ)

## இன்று முதல் வார இறுதி ரயில்

கொழும்பு, மே 18

வடபகுதிக்கான வாரஇறுதி ரயில் சேவை இன்று வெள்ளிக்கிழமை ஆரம்பமாகிறது.

இன்று இரவு 9. 15 மணிக்கு கொழும்பு கோட்டையில் இருந்துபுறப்படும் இந்த ரயில் காங்கேசன்துறையை நாளை சனிக்கிழமை காலை 5 45க்கு சென்றடையும்.

ஞாயிறு மாலை 5.30 மணிக்கு காங்கேசன்துறையில் இருந்து புறப்படும் இந்தரயில் கொழும்பு, கோட்டை ரயில் நிலையத்தை திங்கள் அதிகாலை 3. 45க்கு சென்றடையும். (அ-எ)

## நவாலியில் ஆசிரியர்தினம்

மானிப்பாய், மே 18.

நவாலி கொத்தணிப் பாடசாலைகளின் ஆசிரியர் தினமும் பாராட்டு விழாவும் இன்று வெள்ளிக்கிழமை பிற்பகல் 2 00 மணிக்கு நவாலி மகாவித்தியாலயத்தில் நடைபெறும்.

நவாலி கொத்தணி அதிபர் திரு. ஐ மனோகரன் தலைமையில் நடைபெறும் இவ்விழாவில் யாழ்ப்பாண மாவட்ட கல்விப்பணிப்பாளர் திரு. இரா. சுந்தரலிங்கம் பிரதம விருந்தினராகக் கலந்து கொள்வார். மருதனார்மடம் கோட்டக்கல்வி உதவிக் கல்விப் பணிப்பாளர் திரு. இ. க. குலசேகரன் சிறப்பு விருந்தினராக கலந்து கொள்வார்.

கடந்த வருடம் முழுவதும் ஒரு நாள் கூட லீவு எடுக்காத அதிபர்கள், ஆசிரியர்கள் பாரட்டப்பட்டு சான்றிதழ்கள் பெற உள்ளனர். (இ-90)

## இன்னும் திகதி நிச்சயம் இல்லை

கொழும்பு, மே 18

ஈ. பி. ஆர். எல். எப் க்கும் அரசாங்கத்திற்கும் இடையிலான அடுத்த சந்திப்புக்கான திகதி இன்னும் நிர்ணயிக்கப்படவில்லை.

அடுத்த மூன்று, நான்கு தினங்களில் அடுத்த சந்திப்புக்கான திகதி அறிவிக்கப்படும் என்று கொழும்பில் நேற்று ஈ. பி ஆர். எல். எப் பிரதிநிதி ஒருவர் நம்பிக்கை தெரிவித்தார். (தி)

## கடத்தல் காரர்கள் 12 பேர் கைது

கொழும்பு மே 18

இரண்டு வள்ளங்களில் கடத்தல் பொருட்களை ஏற்றி வந்ததாகக் கூறப்படும் 12 இலங்கையர்களை இலங்கை கடற் படையினர் காங்கேசன் துறையில்இருந்து 12மைல் தொலைவில் ஆழ் கடலில் வைத்துக் கைது செய்தனர்.

சடத்தப்பட்ட புடைவைகளை சுங்கத் திணைக்களம் பறிமுதல் செய்தது. கடத்தல் காரர்களும் சுங்கத் திணைக்களத்திடம் ஒப்படைக்கப் பட்டனர். (உ-ஒ)

## ரெலோவின் கூட்டம்

கொழும்பு மே 18

ரெலோ இயக்கத்தின் அரசியல் குழுக்கூட்டம் சென்னையில் நடைபெற உள்ளது.

அதில் கலந்து கொள்வதற்காக கொழும்பில் தங்கியிருந்த ரெலோபிரமுகர்களான திரு. என். ஸ்ரீகாந்தா, திரு. கோ. கரு[illegible], கே. சிவாஜிலிங்கம், திரு. இளங்கோ-ஆ[illegible] சென்றனர். (உ-எ)

## முல்லைத்தீவு மாவட்டத்தில் யானைத் தொல்லை அதிகரிப்பு

புதுக்குடியிருப்பு மே 18

முல்லைத்தீவு மாவட்டத்தில் யானைகளின் நடமாட்டம் அதிகரித்து வருகிறது.

இரவு வேளைகளில் மக்கள் வெடிசுட்டும் சத்தமிட்டும் யானைகளைத் துரத்துவது சர்வசாதாரணமாக இடம் பெறுகின்றது.

சிலசமயம் பகலிலும்யானைகள் ஊர்மனைகளுக்குள் வருகின்றன.

அண்மையில் வீதியால் சென்றுகொண்டிருந்த புதுக்குடியிருப்பு வாசி ஒருவரை யானை ஒன்று துரத்தியது.

அவர் தப்பிச்சென்று விட்டார். ஆனால் அவரது சைக்கிள் யானையால் சேதமாக்கப்பட்டது. (இ-126)

## மட்டக்களப்பு நகரில் ஞாயிறன்று நூல் அறிமுகவிழா

யாழ்ப்பாணம் மே 18

பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளையின் "பண்டிதமணி நினைவுமலர்", செந்தமிழ் களஞ்சியம்" நூல் அறிமுக விழா இம் மாதம் 20 ஆம் திகதி மட்டக்களப்பு நகர மண்டபத்தில் மகாவித்துவான் எப். எக்ஸ். சி. நடராசா தலைமையில் நடைபெறும்.

புலவர்மணி பெரியதம்பிப்பிள்ளை நினைவுப் பணிமன்றம் ஏற்பாடு செய்துள்ள இவ் விழாவில் புலவர் மணியின் "விபுலானந்தர் மீட்சிப் பத்து" நூல் வெளியீட்டு விழாவும் நடைபெறும்.

மட்டக்களப்பு ஸ்ரீ இராமகிருஷ்ணமிசன் தலைவர் ஸ்ரீமத் சுவாமி ஜீவனானந்தஜீ, மட்டக்களப்பு, திருமலை மறை மாவட்ட அதிவண கிங்ஸ்லி சுவாம்பிள்ளை ஆயர், காத்தான்குடி ஜாமியத்துல் பலாஹ் அரபுக் கல்லூரி பிரதி அதிபர் அல்ஹ ஜ் மௌலவி எஸ். எம். அலியார் ஆகியோர் ஆசியுரை வழங்குவார்கள்.

வடக்கு - கிழக்கு மாகாண கல்வி அமைச்சர் செயலாளர் திரு. இ. ஜே. சற்குணராஜா, புனர்வாழ்வு அமைச்சின் செயலாளர் திரு. ஏ. கே. பத்மநாதன், அரசாங்க அதிபர் திரு. இ. யோகநாதன் ஆகியோர் மங்களதீபமேற்றுவார்கள்.

விபுலாநந்தர் "மீட்சிப் பத்து" நூல் வெளியீட்டு விழாவில் திரு. இரா. நாகலிங்கம், திரு. ஆ. அரசரத்தினம் ஆகியோர் கருத்துரைகள் வழங்குவார்கள்.

"பண்டிதமணி நினைவு மலர்", செந்தமிழ்க் களஞ்சியம்" நூல்கள் அறிமுக விழாவில் யாழ். பல்கலைக்கழக சிரேஷ்ட விரிவுரையாளர்கலாநிதி சி. மௌனகுரு, வித்துவான் க. சொக்கலிங்கம் (சொக்கன்), யாழ் பல்கலைக்கழக தமிழ் துறை சிரேஷ்ட விரிவுரையாளர் கலாநிதி இ. பாலசுந்தரம் ஆகியோர் கருத்துரை வழங்குவார்கள். சிறப்புரையை மட்டக்களப்பு கல்விப் பணிப்பாளர் திரு கு. சோமசுந்தரம், கோப்பாய் ஆசிரிய கலாசாலை உப அதிபர் திருமதி மங்கையற்கரசி திருச்சிற்றம்பலம் ஆகியோரும் வழங்குவார்கள் (இ-7)

### கடத்தல் பொருள்களுடன் கைதான

## 4 இந்தியர், ஓர் இலங்கையர் காரைநகர் முகாமில்

யாழ்ப்பாணம், மே 18

இலங்கையின் வடபிராந்திய கடல் பரப்பில் அண்மையில் கடத்தல் பொருட்களுடன் கைதான 4 இந்தியரும் ஓர் இலங்கையரும்காரைநகர் கடற்படை முகாமில் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர் என்று அறியவருகிறது.

கைதான இலங்கையர் எருக்கலம்பிட்டியைச் சேர்ந்த ரம்தீன் என்ற முஸ்லிம் நபர் எனக் கூறப்பட்டது.

இவர்களிடமிருந்து ஓர் இழுவைப்படகும், 35 பொதிகளில் பல லட்சம் ரூபாபெறுமதியான மின்சார உபகரணங்கள், தலைச்சோடனைப் பொருள்கள், பிளாஸ்டிக் பொருள்கள் என்பன பறிமுதல் செய்யப்பட்டதாகவும் கூறப்பட்டது.

இந்தப் பொருள்கள் தற்போது காங்கேசன்துறையில் உள்ள சுங்கப்பகுதியினரிடம் ஒப்படைக்கப் பட்டுள்ளன, (உ-9)

## வெளிநாடுகளிலிருந்து உடனடியாக 60 டாக்டர்கள்

கொழும்பு, மே 18

இலங்கையில் டாக்டர்கள் பற்றாக்குறையை நீக்கும் முயற்சியில் அரசு ஈடுபட்டுள்ளது. அதன் முதற்கட்டமாக அமெரிக்கா, சிங்கப்பூர், இங்கிலாந்து ஆகிய நாடுகளிலிருந்து அறுபது வைத்திய நிபுணர்களை உடனடியாக வரவழைப்பதென அரசு தீர்மானித்துள்ளது.

இத் தகவலை ஜனாதிபதியின் ஆலோசகர் திரு. பிரட்மன் வீரக்கோன் தெரிவித்தார்.

ஐ. நா. ஊடாகப் போதிய டாக்டர்களை வருவிக்கவும் அரசு முடிவு செய்திருக்கிறது.

பட்டம்பெற்று தொழிலனுபவம் கொண்ட இலங்கை டாக்டர்களில் அநேகமானோர் தமது வாழ்க்கை நலன்களைக் குறிக்கோளாகக் கொண்டு வெளிநாடுகளுக்குச் செல்வதால் இங்கு டாக்டர்களுக்குப் பற்றாக்குறை நிலவுகிறது —

இவர்களின் எதிர்பார்ப்பு முழுவதும் தவறானது எனக் கருதமுடியாது. வெளிநாடு சென்று தொழில்புரியும் இவர்கள் மீண்டும் தாய்நாடு வந்து சேவையாற்ற விரும்பினால் அரசு அதற்கு ஆவன செய்யும் —

அவர்களுக்கு தேவைப்படும் வேதனம் மற்றும் சலுகைகள், வசதிகள் என்பவற்றை நியாயமான அடிப்படையில் வழங்க அரசு தயாராக இருக்கிறது. ஆகவே இவர்கள் தமதுநாட்டு மக்களின் நலன் கருதி இங்கு வந்து சேவைபுரியவேண்டும் — என்றும் அவர் தெரிவித்தார்.

## 12 வருடங்கள் சேவையாற்றிய தாதிமாருக்கு பதவி உயர்வு

கொழும்பு, மே 18

அரசு ஆஸ்பத்திரிகளில் இருபது ஆண்டுகள் தொடர்ந்து பணியாற்றிய தாதிமாருக்கு பதவி உயர்வு வழங்கப்படும் என்று தீர்மானிக்கப் பட்டுள்ளது.

அரச சேவை ஐக்கிய தாதிமார் சங்கம் சுகாதார அமைச் [illegible] இது தொடர்பாக பேசியது. [illegible] சுகாதார அமைச்சர் ரேணுகா ஹேரத் இம்முடிவை எடுத்திருக்கிறார். (உ-எ)

## 687பேர் மரணம்:

ஹைதராபாத், மே 18.

ஆந்திரமாநிலத்தில் சூறாவளியால் உயிரிழந்தோரின் எண்ணிக்கை 687 ஆக அதிகரித்தது.

[illegible] உடமைகளுக்கு ஏற்பட்ட சேதம் இந்தியப்பணத்தில் 700 கோடி ரூபா என்று மதிப்பிடப்பட்டுள்ளது. (அ-எ)

## மதிய போசன நேரத்தில் மொழி அபிவிருத்தி, கலை

### கல்விப் பணிப்பாளர் ஆலோசனை

கொக்குவில், மே 18

பாடசாலைகளில் மதிய போசனம் வழங்கப்படுவது இந்த வாரத்தில் இருந்து நிறுத்தப்படவுள்ளது. இதனுடன் ஈடுபட்ட ஆசிரியர்களின் சிரமம் இதனால் நீங்குகின்றது.

இனிமேல் மதிய உணவு வேளையில் கூடுதலான நேரத்தை இணைப்பாடவிதான வேலைகளில் செலவிட வேண்டும்.

விளையாட்டு,இயல், இசை நாடகங்கள் மற்றும் மொழி அபிவிருத்தி சம்பந்தமானவற்றை வளர்க்க இந்த நேரத்தைப் பயன்படுத்த வேண்டும்,

இவ்வாறு நேற்று யாழ். மத்திய கல்லூரி மைதானத்தில் நடைபெற்ற யாழ். மாவட்ட கோட்டக் கல்விப் பிரிவுகளுக்கு இடையேயான மெய் வல்லுனர் போட்டியில் பிரதமவிருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றிய யாழ். மாகாணக் கல்விப் பணிப்பாளர் திரு. இ. சுந்தரலிங்கம் குறிப்பிட்டார்.

உடற்கல்வி கல்வி அதிகாரி திரு. கே. நாகமணி தலைமையில் நடைபெற்ற பரிசளிப்பு நிகழ்ச்சியில் திருமதி சுந்தரலிங்கம் வெற்றி பெற்றோர்க்கான பரிசில்களை வழங்கினார்.

போட்டியில் கூடுதல் புள்ளிகளைப் பெற்று யாழ். கல்விக் கோட்டம் முதலாம் இடத்தையும், பண்டத்தரிப்புக் கல்விக் கோட்டம் இரண்டாம் இடத்தையும் பெற்றன.

அவற்றுக்குரிய வெற்றிக் கேடயங்களை முறையே உதவிக் கல்விப் பணிப்பாளர்கள் திரு. சி. தியாகராசாவும் திரு. இ. சிவானந்தனும் பெற்றுக்கொண்டனர்.

உடற்கல்வி கல்வி அதிகாரி திரு. ரி. அருணகிரிராஜா நன்றியுரை கூறினார். (அ-69)

## டெலிவிசனுக்குள் கைக்கடிகாரம் கடத்தல்

கொழும்பு, மே 18

டெலிவிஷன் பெட்டிக்குள் வைக்கப்பட்டு கடத்தப்பட்ட 3 ஆயிரம்கைக்கடிகாரங்களை கடந்த செவ்வாய்க்கிழமை கட்டுநாயக்கா விமான நிலையத்தில் வைத்து சுங்கத் திணைக்கள அதிகாரிகள் கைப்பற்றினர்.

இக்கைக் கடிகாரங்களின் மதிப்பு 30 லட்சம் ரூபா என்று சொல்லப்படுகிறது.

மத்திய கிழக்கு நாடு ஒன்றில் இருந்து திரும்பிய இலங்கைப்பிரசை ஒருவரே இவற்றைக் கொண்டு வந்தார். (உ-எ)

### பகவான் சாயியின் வழியை ஊக்குவித்த

## ஞானசேகரம் ஐயா அவர்களின் அமரத்துவம்

திரு. செல்வதுரை ஞானசேகரம் (ஓய்வுபெற்ற உத்தியோகத்தர், வனபரிபாலன இலாகா) அவர்கள் 16 05 1990 அன்று அமரத்துவம் எய்தினார்.

அன்னார் காலம்சென்ற M. S. துரை தம்பதியினரின் சிரேஷ்ட புத்திரனும், இராஜலட்சுமியின் அன்புக் கணவரும், திருவாளர்கள்: பாலசுப்பிரமணியம், அருட்பிரகாசம் (அவுஸ்திரேலியா), திருமதி ஞானாம்பிகை மயில்வாகனம் ஆகியோரின் மூத்த சகோதரரும், கந்தஞானி (பாஹ்ரென்), சடாட்சரயோகினி, குகஞானி, பாலயோகினி, குமாரயோகினி (ராகமம் தவியார் மருத்துவக் கல்லூரி), சண்முகயோகினி (யாழ். பல்கலைக்கழகம் ஆங்கிலத் துறை) ஆகியோரின் அன்புத்தந்தையும், வதனராணி (பாஹ்ரென்), குணநாதன் (யாழ்ப்பாணம் மக்கள் வங்கி), ஜெயகிருஷ்ணன் (சட்டத்தரணி), ரவீந்திரன் ஆகியோரின் அன்பு மாமனாரும், ஜனகர், மதுசூதனன் ஆகியோரின் அன்புப் பாட்டனாரும் ஆவர்.

இறுதிக் கிரியைகள் அன்னாரின் கொக்குவில் அச்சுக்கூட ஒழுங்கை இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனம் செய்வதற்காக கொக்குவில் மயானத்துக்கு 20-05-1990 ஞாயிற்றுக்கிழமை அன்று காலை 8 மணிக்கு எடுத்துச்செல்லப்படும். [13215]

## மரண அறிவித்தல்

### திருமதி செபஸ்தியாம்பிள்ளை மேரி மாகிறெற்லில்லி

மாதகல் திருமதி செபஸ்தியாம்பிள்ளை மேரி மாகிறெற்லில்லி காலமானார்.

இவர் காலஞ்சென்ற செபஸ்தியாம்பிள்ளை சின்னத்துரை அவர்களின் மனைவியும், லூர்து அன்ரனி (பதிலதிபர், சென். ஹென்றீஸ் கல்லூரி, இளவாலை,) யேசுதாசன் [ஆனந்தராசா] (சாரதி, கச்சேரி, மன்னார்), அருட்சகோதரி பாஸ்கால் (அதிபர், "Little Flower Convent", கரம்பன்), மேரி ஆன் ஜெயமலர் (ஆசிரியை, சஞ்சிமட மகா வித்தியாலயம், திருகோணமலை), மரியகொறற்றி மல்லிகா (கச்சேரி, மன்னார்) ஆகியோரின் தாயாரும், ஜெயமணி, ஜெயா, சேவியர் [பாலன்] (Power House, திருகோணமலை), அன்ரனி கிறிசாந்த் (ஓமான்) ஆகியோரின் மாமியாரும், ஜோசவ் ஜெயக்குமார், லூட்ஸ் ஜெயக்குமாரி, பிறிம்றோஸ், ஜெயானந்தி, செபஸ்தியன், ஜெயானந், செபஸ்தியாம்பிள்ளை, விஜயகுமார் ஆகியோரின் பேர்த்தியும், பொன்ராசா இரத்தினம், இரத்தினசாமி பொன்னுக்கண்டு ஆகியோரின் சகோதரியும், அருட்திரு. டொன் பொஸ்கோ (செபமாலை தாசர் சபை, அதிபர், தோலகட்டி), அருட்செல்வி ஜீவமலர் (புனித சவேரியார் கன்னியர் மடம், மன்னார்), புஸ்பரத்தினம் (கனடா), துரைரத்தினம் (கனடா), ஜெயரத்தினம் (கனடா), யேசுமலர் பெனடிக்ற், பற்றிமா மேரி தனேந்திரன் ஆகியோரின் பெரிய தாயாருமாவார்.

நல்லடக்கம் 19 ஆம் திகதி சனிக்கிழமை பிற்பகல் 3-00 மணிக்கு மாதகலில் நடைபெறும். உற்றார், உறவினர் இவ்வறிவித்தலை ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
திரு. லூர்து அன்ரனி
(மகன்)

மாதகல்:
[3591]

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேஷன் (பிறைவேட்) லிமிட்டெட்டினால் யாழ்ப்பாணம், நாவலர் வீதி, 292/2 இலக்கத்தில் உள்ள அச்சகத்தில் 18-05-1990இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org